உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 36 | பிங்கள - ஆவணி - 10—9—77 | இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## கவசத் திருநீறு

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

— சம்பந்தர்.

### சமயக்கோடை !

உலகம் இன்று விஞ்ஞான அறிவிலும், நாகரிகத்திலும் மேலோங்கி நிற்கிறது. அரசியல், மற்றும் சமூகத்தின் வளர்ச்சியில் சமயங்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. கண்டதே காட்சி, கொண்டதே கோலம் எனவாழும் இன்றைய சமுதாயம் சமய வாழ்வைப் பற்றிய உண்மையை அறியாது நிலை தடுமாறுகின்றது. உள்ளத்து வளர்ச்சியோடு, புறக்கோலங்களும்

இன்றியமையாதன என்பதனை உலகு இன்றும் உணர்ந்திருக்கிறது. நாட்டுக்கு நாடு ஒரு கொடி, கட்சிக்குக் கட்சி சில சின்னங்கள், பணிக்குத்தக்க பல உடை வகைகள் இவைபோல்வன பல புறக்கோலங்களை இன்றும் உலகு முற்றிலும் புறக்கணிக்க முடியவில்லை சைவம் போன்ற தொன்மையான சமய வழிபாட்டில் மேற்கொள்ளப்பெற்ற அர்த்தமுள்ள பல சம்பிரதாயங்களையே அரசும் சமூகமும் இன்றும் பின்பற்றுகின்றன என்பதனை உற்று நோக்குவார் நன்கு உணர்வர்.

## சிவச்சின்னங்கள் :

'சைவத்தின் மேற் சமயம் வேறில்லை; அதிற்சார் சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வம் இல்லை' என்பது சைவ எல்லப்ப நாவலர் அவர்கள் கண்டு தெளிந்த உண்மை சிவபரம்பொருளை முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபடுவோர் சைவர் எனப் படுவர். உள்ளத்தில் சிவபரம்பொருளை வைத்து வழிபடுவோர் புறக்கோலமாக அணியத்தக்க சிவச்சின்னங்கள் இரண்டு. அவை திருநீறு, மற்றும் உருத்திராக்கம் என்பன. வேதங்களில் தொடங்கி ஆகமங்கள், உபநிடதங்கள், புராணங்கள், தேவாரம் முதலிய தெய்வ நூல்கள் பலவும் திருநீறு பற்றி விரிவான பல செய்திகளைத் தருகின்றன. ஒருநாட்டின் தேசியக் கொடி பற்றிய மரியாதைச் சம்பிரதாயங்கள் எத்தனை உண்டோ அதே போல, சைவ சமயத்தின் கவசமாக விளங்கும் திருநீறுபற்றியும் பல நடைமுறைகள் உண்டு. திருநீறு பற்றிய பல்வேறு செய்திகளை இங்கே தொகுத்து நோக்குவோம்.

## திருநீற்றின் தத்துவம் :

விபூதி என்ற சொல்லுக்கு ஐஸ்வரியம் (செல்வம்) என்பது பொருள். உலகத்தில் உள்ள எந்த ஒரு பொருளையும் எரித்தால் சாம்பல் மிஞ்சும். சாம்பலை எரித்தால் சாம்பல்தான் மிஞ்சும். நிலைமாறுத தன்மை சாம்பலுக்கு உண்டு. அழிவதும்; நிலைமாறுபடுவதுமாகிய உலகியலில் கிடந்து உழலுகின்ற மக்கள், அழியாததும் மாறுபாடு இல்லாததுமாகிய ஒரு வாழ்வை எய்துதற்கே திருநீற்றைப் பூசவேண்டும் என முன்னோர் வகுத்தனர். என்றும் நிலைமாறுதபொருள் இறைவனே. அவ்விறைவனையே இயற்கைஎன்கிறோம். எனவே, இயற்கையும் இறைவனும் ஒன்றே. இதனால்தான் இறந்தோரைக் குறிக்குங் கால் இயற்கை எய்தினர் எனக்குறிக்கும் வழக்கு உண்டாயிற்று. எனவே, நிலைபேறுடைய சிவபரம்பொருளை அடைதற்கு உரிய உயர்ந்த அடையாளச்சின்னம் திருநீறு என்பது விளங்குகிறது.

யாவரும் பூசும் நீறு :

'நீறில்லா நெற்றி பாழ்' என்ற பழமொழி திருநீற்றின் பெருமை பேசுவது. மானுடர்கள்மட்டுமின்றித் தெய்வ நாயகனாகிய சிவபிரான் அணிவதும் இதுவே என்பர் திருமூலர். 'கங்காளன் பூசும் கவசத் திருநீறு' என்பது திருமந்திரத் தொடர். தேவர்களும் அசுரர்களும் திருநீறு பூசும் நியமமுடையவர்கள் என்பர் திருஞானசம்பந்தர். 'வானவர் மேலது நீறு' என்றும், 'இராவணன் மேலது நீறு' என்றும் பேசுகிறது தேவாரம். தாய்ப்பால் குழந்தைக்கு உணவாதலோடுகூட, அதுவே நோய்தீர்க்கும் மருந்தும் ஆதல்போல, திருநீறு வெறும் சைவ-சமய அடையாளச் சின்னமாக மட்டும் அமையாது உடல் மற்றும் உயிர்ப் பிணிகளுக்கு மாமருந்தாகவும் அமைவது.

வினைதீர்த்த விபூதி :

தேவி பாகவதத்தில் ஒரு சுவையான நிகழ்ச்சி வருகிறது. நிலவுலகில் பெரும் பாவச்செயல்கள் செய்த தீயோர் பலர், காலன் உலகில், நரகக் குழியில் விழ்ந்துகிடந்து, கரையேற மாட்டாது பெருந்துயர் உறுகின்றனர். அவ்விடம் பெருமுனிவராகிய துருவாசர் ஒருமுறை வருகிறார். நரகக் குழியில் வாழும் பாவிகளைக் காண விரும்பி, அருகில் சென்று குனிந்து நோக்குகின்றார். பாவத்தின் பயனால் விளைந்த துயரத்தைக் கண்டு, வருத்தத்தால் நெற்றியைச்சுளிக்கிறார். அப்போது அவரது நெற்றியில் பூசியிருந்த திருநீற்றுத்துகள் நரகக் குழிக்குள் சிறிது சிந்திற்று. திருநீற்றுச் சார்பால் நரகக் குழியில் கிடந்த பாவியர் பாவம் நீங்கி நலம்பெற்று உய்தி பெறுகின்றனர். கதை போல இருந்தாலும், பாவம்போக்கும் மாமருந்து திருநீறு என்பதனைத் தேவிபாகவதம் விளக்குகின்றது.

பஞ்சபூதமும் இதுவே :

பஞ்ச பூதங்களாகவும், மனம் மற்றும் இந்திரியங்களாகவும் திருநீறு விளங்குகின்றது என அதர்வ வேதம் விரிக்கிறது.

" அக்னிரிதி பஸ்ம; வாயுரிதி பஸ்ம; ஜலமிதி பஸ்ம;
ஸ்தலமிதி பஸ்ம; வ்யோமேதி பஸ்ம; ஸர்வம்ஹவா
இதம் பஸ்ம; மந ஏதானி சக்ஷுஷி பஸ்மானி "

என்ற வேதத் தொடரை உச்சரித்துக்கொண்டு, திருநீற்றை உடலில் பூசிக்கொள்ளவேண்டும். இக்கருத்தினையே 'ஜாபாலோபநிஷத்து'ம் விரிவாகக்கூறுகின்றது.

## அர்த்தமுள்ள பெயர்கள் :

திருநீற்றிற்கு 1. விபூதி, 2. பஸிதம், 3. பஸ்ம, 4. க்ஷாரம், 5. ரக்ஷா என்ற வேறு பெயர்களும் உண்டு என்பதை ப்ருஹத் ஜாபாலம் என்ற உபநிடதம் விளக்குகின்றது. இதுவே, விபவதி அனயா என்ற அடிப்படையில், ஐஸ்வரியத்தை அளிப்பது என்ற பொருளில் விபூதி என்ற பெயரும், பூசுபவர்களுக்கு ஒளி அளிப்பதால் பஸிதம் என்ற பெயரும், எல்லாப் பாவங்களையும் நீக்குவதால் பஸ்ம என்ற பெயரும், தீமைகளிலிருந்து காப்பதால் க்ஷாரம் என்ற பெயரும், பூதம் பேய் முதலியவற்றின் அச்சத்திலிருந்து காப்பதால் ரக்ஷா என்ற பெயரும் திருநீற்றுக்கு வந்ததாகக் குறிப்பிடுகிறது.

## தயாரிப்பது எப்படி ?

திருநீறு தயாரிக்கும் முறையில் நால்வகையாகப் பெயர்பெறுகிறது. (1) கல்பம், (2) அனுகல்பம், (3) உபகல்பம், (4) அகல்பம் என்பன அவை. இவற்றுள் கல்பம் என்பது, அழகு பொருந்திய பசுவின் சாணத்தை, தாமரை அல்லது புரச இலையில், பூமியில் விழ்வதன் முன்னம் ஏந்தி, ஏந்தும்போது சத்யோஜாத மந்திரம் கூறியும், உருண்டை பிடிக்கும்போது வாம மந்திரம் கூறியும், காயவைக்கும் போது அகோர மந்திரம் கூறியும், சிவாக்கினியில் கொளுத்தும் போது தத்புருட மந்திரம் கூறியும், எடுக்கும்போது ஈசான மந்திரம் கூறியும் தயாரிக்கப்பெறுவது. காட்டில் வீழ்ந்து கிடக்கும் சாணத்தை எடுத்துவந்து மேற்கண்டவாறு தயாரிப்பது அனுகல்பம் எனப்படும். காட்டில் விழுந்த சாணம் தாமே காய்ந்து, காட்டுத் தீயால் பக்குவப்பட எடுத்துக்கொள்ளப் படுவது உபகல்பம்; இவ்வாறின்றி வேறு ஒருவரால் தயாரித்து நாம் பெறுவது அகல்பம் எனப்படுகிறது. இவை சிவாகமத்தில் கூறப்பட்டன.

## தரிப்பது எப்படி ?

தூய வெண்ணிறமான திருநீற்றை மட்டுமே நாம் பூசுதல் வேண்டும். வேறு கருமை, செம்மை, பொன்மை நிறமுடையன பூசலாகா. திருநீற்றைப் புதிய மெல்லிய துணியால் வடிகட்டி புதுப் பாண்டத்துள் இட்டுவைத்து, மல்லிகை, முல்லை, பாதிரி, சண்பகம் முதலிய மண மலர்களைப் பெய்து, புதுத்துணியால் பாண்டத்தின் வாய்ப்புறத்தைக் கட்டிவைக்க வேண்டும். அதிலிருந்து திருநீற்றைப் பட்டுப்பை, சிறு சம்புடம், வில்வக் குடுக்கை போன்றவற்றில் எடுத்துவைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும். விபூது தரிக்கும்போது, வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்று தரித்தல் நலம். அவ்வாறு தரிக்கையில் திருநீறு

நிலத்தில் சிந்தாமல், அண்ணாந்து நின்று, சிவ சிவ என்ற நாமத்தை உச்சரித்தவண்ணம், வலக்கையின் நடுவிரல் மூன்றாலும் தரிக்கவேண்டும். திருநீறு தரிக்கும்போது குனிந்து கொண்டோ, வாய் பிளந்த நிலையிலோ, தலைநடுக்கத்துடனோ தரித்தலும், ஒரு விரலால் தரித்தலும் பிழை என்று வேதாகமங்களால் விலக்கப்பட்டுள்ளன.

எப்போது தரிப்பது ?

புனிதப் பொருளாகிய திருநீற்றினை நேரமும், இடமும் அறிந்து மட்டுமே தரித்தல் வேண்டுமென்பது சைவ - சமயக் கோட்பாடு. தீயர் பாவியர் இவர்களுக்கு முன்னரோ, தூய்மையற்ற இடத்திலோ, நடந்தபடி அல்லது படுத்தபடியோ திருநீறு பூசுதல் கூடாது. சந்தியாகாலங்கள், காலை மாலை வேளைகள், நீராடிய பின்னர், வழிபாடு தொடங்கும்போது, உணவு கொள்ளும்முன், உறங்கச் செல்லுமுன், கடன்கள் முடித்துத் தூய்மை செய்த பின்னர், முறையான தீட்சை பெறுதர்வர்களைத் தீண்டிவிட்டால் அதற்குப்பின், பெண், எலி, கழுகு, பூனை, கொக்கு, அலி இவர்களைத் தீண்ட நேர்ந்தால் அதற்குப்பின்னர் எல்லாம் திருநீறு பூசுதல் இன்றியமையாதது.

யாரிடம் பெறுவது ?

நல்ல மருந்தாயினும் - சிறந்த மருத்துவர் வாயிலாகவே பெறுதல் முறை. அதுபோல் திருநீற்றை நம்மினும் உயர்ந்த பெரியோர்களிடமிருந்தே பெற்றுத் தரித்தல் வேண்டும். சிவ தீட்சை முதலியவற்றால் தம்மில் உயர்ந்த பெரியோர்களிடம் திருநீறு பெறும்போது, மூன்று அல்லது ஐந்து முறை வணங்கி எழுந்து கும்பிட்டு நின்று, இருகையும் நீட்டி, இடக்கைமேல் வலக்கை வைத்து வாங்கித் தரித்துக்கொண்டு மீண்டும் ஒரு முறை வீழ்ந்து வணங்குதல் வேண்டும். இறைவன் சந்நிதி, வேள்வித்தீ, குருநாதர், சிவனடியார் முன்னிலையில் திருநீறு பூசிக்கொள்ளும்போது, முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டு அணிவதே சிறந்த சமய சம்பிரதாய முறையாகும். ஒற்றைக்கை நீட்டி வாங்கிய திருநீறு, விலைக்கு வாங்கிய திருநீறு, சிவதீட்சை இல்லாதார் கொடுக்கும் திருநீறு இவை தரிக்கக் கூடாதவையாகும்.

எங்கெங்கே தரிப்பது ?

திருநீற்றைத் தரிக்கும் முறை இரண்டாகக் கூறப்படும். உத்தூளனம், திரிபுண்டரம் என்பன அவை. உத்தூளனம் என்பது தூளாக எடுத்துப் பூசுவது. திரிபுண்டரம் என்பது மூன்றுகோடுபட அணியும்நெறியாகும். திரிபுண்டரமாகத்திருநீறு

பூசும்போது, மூன்று கீற்றுக்களும் நெற்றியில் வளையாமலும் இடையில் விடுபட்டுப் போகாமலும், ஒன்றை ஒன்று நெருங் காமலும், இடைவெளி ஓர் அங்குலத்திற்கும் குறைவாக அணி தல் வேண்டும். இவ்வாறு அணிவதைப் பதினாறு இடங்கள் என்று கூறுவர். அவை, 1. தலை 2. நெற்றி 3. மார்பு 4. கொப்பூழ் 5, 6. முழந்தாள் இரண்டு 7, 8. புயங்கள் இரண்டு 9, 10. முழங்கைகள் இரண்டு 11, 12. மணிக்கட்டுகள் இரண்டு 13, 14. விலாப்புறம் இரண்டு 15. முதுகு 16. கழுத்து என்பன. இவ்வாறு அணியும்போது நெற்றியில் இரண்டு புருவங்களின் கடை எல்லை வரையிலும் அணியலாம். மார்பு புயங்களில் ஆறு அங்குல அளவும், ஏனைய இடங்களில் ஒரு அங்குல அளவும் அணிய வேண்டும். தீட்சை பெற்றவர்கள் சந்தியா காலங்களில் நீரில் குழைத்துத் தரிக்கலாம். ஏனைய காலங்களில் குழைக் காமல் தரித்தலே முறை. பதினாறு உறுப்புக்களில் திருநீறு பூசுவதன் நோக்கம் அவ்வவ் உறுப்புக்களால் விளைந்த பாவ நீக்கமே என்பதனைக் கந்தபுராணம் கூறுகின்றது.

### பெருமை பேசும் நூல்கள் :

தமிழில் திருநீற்றின் பெருமையைத் தேவாரம், திருமந்திரம், உபதேசகாண்டம், சூதசங்கிதை, வாயுசங்கிதை, காஞ்சிப் புராணம், தணிகைப் புராணம், பேரூர்ப்புராணம், சீகாளத்திப் புராணம், கடம்பவன புராணம், பிரமோத்திரகாண்டம், சிவ ஞானதீபம், மற்றும் சில தனிப்பாடல்கள் போன்றன விரிவாக விளக்குகின்றன.

### பாவ மூட்டை :

இன்று பெரும்பாலான அன்பர்கள் கடைகளில் விற்கப்படும் திருநீற்றுப் பொட்டலங்களை வாங்கிப் பயன்படுத்துகின்றனர். இவை, உண்மையான பசுவின் சாணங்கொண்டு தயாரிக்கப் பட்டன அல்ல. பெரும் அளவில் உமியைக் கருக்கிப் பொடி செய்தும், மாக்கல் மற்றும் வேறு பொருட்களையும் கலந்தும் விபூதியாக விற்கின்றார்கள். இது உண்மையானால் இவற்றைப் பூசுவதனால் பயன் ஏதும் இல்லை. சோறு, விபூதி இவற்றை விலைக்கு விற்றல் கூடாது என்பர். அது போல, விலைக்கு வாங்கிய விபூதியைத் தரித்தலாகாது என விலக்கினர் முன்னோர், பிற்காலத்தில் இவ்வாறு விபூதி என்றபெயரில் கலப்படம்செய்து விற்பார்கள் என்பதனை அறிந்துதான் முன்னோர் அவ்வாறு கூறியிருத்தல் வேண்டுமென எண்ணவேண்டியுள்ளது.

பால் வெள்ளை நிறம் என்றால், வெள்ளை நிறமுடையன வெல்லாம் பாலாவதில்லை. பாலின் பயனையும் அவை தாரா-

எனவே அன்பர்கள் கறவைப்பசுக்களின் சாணங்களைத் தூய்மையாக எடுத்துக் காயவைத்துச் சுட்டெரித்து, திருநீற்றைத் தாமே தயார்செய்து, அவற்றைப் பூசி வருதலே நலமாகும். காலநிலையில் நகர்ப் புறங்களில் வாழ்பவர்களுக்கு இவ்வாறு தயாரித்தல் இயலாது என்றாலும், சிற்றூர்ப் பகுதிகளில் உறவினர்கள் வாயிலாகத் தயாரிக்கச் செய்து பெற்றுத் தூய விபூதியையே பூசவேண்டும். ஏன் எனில் பசுஞ்சாணத்தால் தயாரிக்கப் பெற்ற திருநீற்றிற்கு உடலில் உள்ள பிணிகள் பலவற்றைப் போக்கும் ஆற்றல் உண்டு. கலப்பட விபூதியால் பயன் விளைதல் ஏது? எனவே, திருநீற்றை விற்பவர்களும், முறையாக அவற்றைத் தயாரித்து விற்பதே அறமும், புண்ணியமுமாகும்.

முறையாகத் தை மாதத்தில் தொடங்கி, பசுஞ்சாணத்தால் உருண்டை பிடித்துக் காயவைத்து, கருக்காய் இட்டுக் கொளுத்தி, மாசித் திங்கள் சிவராத்திரிக்குப் புதிய விபூதி தயாரித்துப் பயன்படுத்துதல் சிற்றூர்களில் வழக்கமாகும். சுட்டெரித்த விபூதி வெள்ளையாக அமைந்தால், நன்மைக்கு அறிகுறி என்றும், கறுத்தோ, சிவப்பாகவோ அமைந்தால் அது தீமைக்கு அறிகுறி என்றும் கொள்ளுவதும் மரபாக இருக்கிறது. நகரில் வாழ்வோர் நலங்குறித்துச் சிற்றூர்ப் பகுதிகளில் வாழ்வோர் திருநீற்றை முறையாகத் தயாரித்து, நகர்ப்புறங்களில் வாழ்வார்க்கு இலவசமாக வழங்குதல் நல்லது.

நலம்பெற்று வாழ்வோம் :

'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' என வாழ்ந்த மெய்ப்பொருள் நாயனார் அருள்வரலாற்றைப் பெரியபுராணம் பேசும். பகைவனுக்கருளும் பாங்கு பெற்ற மெய்ப்பொருள் நாயனார் உலகுக்கு விடுத்த இறுதிச்செய்தி "விதியினாலே பரவிய திருநீற்றன்பு பாதுகாத்து உய்ப்பீர்" என்பது. எனவே புற அழகோடு, உடல்நலம் பேணி ஆன்ம வளர்ச்சிக்கும் உதவும் சைவ – சமயச் சாதனமாகிய திருநீற்றை நியமமாகப் போற்றி அணிந்து மக்கள் இனிது வாழ்வார்களாக.

ஆற்ற லடல்விடை யேறும் ஆல வாயான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

— சம்பந்தர்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தருமையாதீனம் ஆவணிமூல விழாவில்

வழங்கியருளிய

# ஆசியுரை

24—8—77

" ஆலம் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் – பாலொளியாம்
மத்தனே கூடல் மதுரா புரிஉமையாள்
அத்தனே ஆலவா யா."

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க நானூறு ஆண்டு களாக நற்பணிகள் பலவற்றை ஆற்றிவருகிறது நம் தருமை யாதீனம். தேவாரப் பாடசாலை, வேத சிவாகம பாடசாலை' தமிழ்க் கல்லூரி, உயர்நிலைப் பள்ளி, தொடக்கப் பள்ளி ஆகிய ஐந்து கல்வி நிலையங்கள் நம் ஆதீனச் சார்பில் நடத்தப்பெற்று வருகின்றன. இத்தகைய கல்வி நிலையங்களும் இவ்விடத்துச் சூழலும் மாணவர்கள் கல்வியறிவோடு தெய்விகப் பண்பாட் டுணர்வினையும் பெற்று ஈடேற்றம் அடையத் துணைபுரிகின்றன.

நாம மந்திரம் :

இறைவன் திருநாமத்தை வாய் மணக்கச் சொல்லுவதுதான் இறையருள் பெறுதற்குரிய எளிய வழியாகும் என்பதை அனைவ ரும் உணரவேண்டும். நல்லனவற்றைச் சொல்வதற்கும் செய்வ தற்கும் தயங்குதல் கூடாது. அதிலும் இறைவன் திருப்பெயரை ஓதுவதற்கு ஒருபோதும் நாம் கூசுதல் கூடாது. மன்னர் பிரானாக விளங்கிய சேரமான் பெருமாள் நாயனார் தனக்கு இறைவன் அளித்த கருவிகரணங்களை அப்பெருமானது வழிபாட் டிற்கே உரிமையாக்கினார்.

" சிந்தனைசெய்ய மனம் அமைத்தேன்,
செப்ப நா அமைத்தேன்
வந்தனைசெய்யத் தலை அமைத்தேன்,
கை தொழ அமைத்தேன்,
பந்தனை செய்வதற்கு அன்பு அமைத்தேன்,
மெய் அரும்பவைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசற்கு
இவை யான் விதித்தனவே."

இப்பாடலால் அதனை நாம் உணரலாம். கடவுள் வழிபாட்டில் நாம் கடைப்பிடித்தொழுகவேண்டியநெறிமுறைகளை ஒருபோதும் புறக்கணித்தல் கூடாது.

" செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும் "

என்று கூறுகின்றார் திருவள்ளுவர். செய்யக் கூடாதவைகளைச் செய்தலும் குற்றம், செய்ய வேண்டுவனவற்றைச் செய்யாதிருத்தலும் குற்றமாகும். கடவுள் பெயரைச் சொல்ல நாம் கூசினால் நமக்கு அருள் செய்தற்கு அவ்விறைவனும் கூசுவார்.

" நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே "

என்பது அப்பர் சுவாமிகள் அருள்வாக்கு. மனமுருகித் தன்னை நினைப்பவர் நெஞ்சில் இறைவன் புகுந்து நிற்பான்; பொய்ம்மையாளரின் செயலைக்கண்டு இறைவன் நாணிச்சிரிப்பான் என்பது அப்பாடலின் பொருளாகும்.

## என்ன பயன் கிடைக்கும்?

இறைவன் பெயரைச் சொன்னால் நமக்கு என்ன பயன் கிடைக்கும்? என்பது இக்கால இளைஞர்களின் கேள்வியாயிருக்கிறது. இக்கேள்விக்கு விடையளிக்கும் வகையில் புராணக் கதையொன்று கூறப்படுவதுண்டு. அக்கதையை இங்கு நாம் நினைவு கூர்தல் பொருந்தும்.

சமயக் கூட்டங்களிலும் கடவுள் வழிபாட்டிலும் " நமப்பார்வதி பதயே" என்று ஒருவர் சொல்ல, "ஹரஹர மகாதேவா" என்று

எல்லோரும் கூறி அனைவரும் ஒருமித்து இறைவனை வழிபடும் முறை தொன்றுதொட்டு நிகழ்ந்துவரும் ஒரு கூட்டு வழிபாட்டு முறையாகும்.

குருநாதர் கூறிய கதை:

குருநாதர் ஒரு கூட்டத்தில் " நமப்பார்வதி பதயே " என்று கூறினார். கேட்ட எல்லோரும் " ஹரஹர மகாதேவா " என்று கூறினர். ஒருவன்மட்டும் கூறவில்லை. குருநாதர் ஏனப்பா நீமட்டும் இறைவன் திருப்பெயரைக் கூறவில்லை என்றுகேட்டார். அவன் எழுந்து "ஹரஹர மகாதேவா" என்றுசொன்னால் என்ன பயன் கிடைக்கும் ?" என்று கேட்டான்.

குருநாதர் அவனைப் பார்த்துச் சிரித்து, 'தம்பீ அப்புனித நாமத்தின் பெருமையை உனக்கு இப்போது தெரிவிக்கிறேன். நீ இந்த ஊரின் எல்லையிலே ஆற்றங்கரையிலே மலமுருட்டிக் கொண்டிருக்கிறது ஒரு வண்டு. அதனிடம்சென்று கேள் ; பதில் கிடைக்கும்' என்று கூறினார். அவனும் குருநாதர் கூறியவாறே ஆற்றங்கரைக்குச் சென்றான். மலமுருட்டும் வண்டைப்பார்த்து, 'ஹரஹரமகாதேவா என்று சொன்னால் என்னபயன்கிடைக்கும்?' என்று கேட்டான். உடனே அவ்வண்டு சிறகடித்துப் பறந்து மூன்றுமுறை சுற்றிவந்து கீழே விழுந்து இறந்துவிட்டது. அவன் ஒன்றும் புரியாமல் குருநாதரிடம் ஓடிவந்து, 'வண்டு பதில் ஒன்றும் கூறாமல் இறந்துவிட்டது' என்று கூறினான்.

குருநாதர் அவனைப்பார்த்துக் 'கவலைப்படாதே ; இந்த ஊரின் மேற்கு எல்லையில் ஒரு பெரிய ஆலமரம் இருக்கிறது; அந்த மரத்தின் உச்சிக் கிளையில் ஒரு கிளி அமர்ந்திருக்கிறது; அதனிடம் சென்று கேள் ; உனக்குப் பதில் கிடைக்கும்' என்று கூறினார். அவனும் அவர் சொன்னபடியே சென்றான். ஆல மரத்தின் உச்சியில் ஒரு கிளி அமர்ந்திருப்பதைக் கண்டான். மெல்ல ஏறி அதனிடம், 'ஹரஹர மகாதேவா என்று கூறினால் என்ன கிடைக்கும்' என்று கேட்டான். உடனே கிளி சிறகடித்துப் பறந்து மூன்று முறை சுற்றிக் கீழே விழுந்து இறந்துவிட்டது. அவன் திரும்பவும் குருநாதரிடம் சென்று நிகழ்ந்ததைக் கூறி விடை கேட்டான்.

குருநாதர் 'கவலைப்படாதே' என்று ஆறுதல்கூறி, 'இந்த ஊரில் கிழக்கு எல்லையில் ஒரு அக்ரகாரமிருக்கிறது. அங்கு ஒரு அந்தணர் வீட்டில் இன்று ஒரு பசு கன்றீனப் போகிறது அக்கன்றிடம் சென்று கேள்' என்று கூறி அனுப்பினார். அவனும் குரு வார்த்தையைத் தட்டாமல் அந்தணர் வீட்டிற்குச் சென்றான். குருநாதர் கூறியபடியே பசுவொன்று கன்றீன்றது.

ஈன்ற கன்றின் காதுகளில் 'ஹரஹர மகாதேவா' என்று உரக்கச்சொல்லி 'அந்நாமமந்திரத்திற்கு என்னபயன்?' என்று கேட்டான். நன்றாக இருந்த அக்கன்று உடனே நிலைதடுமாறிக் கீழேவிழுந்தது. சிறிது நேரத்தில் இறந்துவிட்டது. அந்தணர், வந்திருந்த அவனைச் சந்தேகப்பட்டு அடிக்கவும் வந்து விட்டார். தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிச்சென்று குருநாதரிடம் நடந்ததைக் கூறினான்.

பிறந்த குழந்தை பேசிற்று :

"விரைவில் உனக்கு விடை கிடைக்கும் கவலைப்படாதே" என்று குரு ஆறுதல் கூறி 'இந்த நாட்டு மன்னனின் மனைவி மகாராணி இன்னும் சிலநாட்களில் அரசிளங்குமரன் ஒருவனைப் பெறப்போகிறாள். நீ அங்குச் சென்று அவ்வரசிளங்குமரனிடம் கேள்' என்று கூறினார். அவன் குருநாதரிடம் 'வேண்டாம் இச்சோதனை. அந்தணர் வீட்டில் நான்பட்டபாடே போதும்; அரண்மனைக்குச் சென்று அங்கு ஏதேனும் விபரீதம் நேர்ந்து விட்டால் நான் உயிர் தப்புவதே கடினம்' என்று கூறிப் போகத் தயங்கினான். குருநாதர் தேறுதல்கூறி 'நான் உனக்குத்துணையாக இருக்கிறேன் போய்வா' என்று அனுப்பினார்.

அவன் அரண்மனைக்குள் மெல்லச்சென்று அப்பொழுதுதான் பிறந்திருந்த அரசகுமரன் காதுகளில் 'ஹரஹரமகாதேவா' என்று உரக்கக் கூறி, "இந்நாமமந்திரத்தைக் கூறினால் என்ன பயன்கிடைக்கும்? என்று பயந்துகொண்டேகேட்டான். பிறந்த குழந்தை பேச ஆரம்பித்தது. 'மலமுருட்டும் வண்டாக இருந்த நான் ஒருமுறை ஹரஹர மகாதேவா என்ற திருநாமத்தைக் கேட்டதால் கிளியாகப் பிறந்தேன். மறுமுறை அந்நாமத்தைக் கேட்டசிறப்பினால் உயர்வுபெற்றுப் பசுவின் கன்றாகப்பிறந்தேன். கன்றாக இருந்தபொழுது காது குளிர அந்நாமத்தைக் கேட்ட பெருமையால் இன்று இந்தநாட்டு மன்னன் மகனாகப் பிறந்துள்ளேன்' என்று கூறிற்று குழந்தை. அவனுக்கு மகிழ்ச்சி எல்லை மீறியது. ஹரஹர மகாதேவா என்று கூறினால் அறியாமை அகலும்; பாவங்கள் நீங்கும்; பிறவிநோய் தீரும் என்ற உண்மையை உணர்ந்தான். ஓடிவந்து குருநாதரை வணங்கி 'இறைவன் திருப்பெயரை ஓதுவதால் விளையும் பயனை உணர்ந்தேன்; இனி இடைவிடாமல் அப்பெயரை ஓதி அரனடி அடைவேன்' என்று கூறிச்சென்றான் என்பது அக்கதை.

அப்பர் சுவாமிகள் இறைவன் திருப்பெயரை ஓதுவார்க்கு உண்டாகும் பயனை ஒரு திருப்பாடலால் தெரிவிக்கின்றார்.

" ஐயனே அரனே யென்று அரற்றினுல்
உய்யலாம் உலகத்தவர் பேஞுவர்
செய்ய பாதம் இரண்டும் நினையவே
வையம் ஆளவும் வைப்பர் மாற்பேறரே "

என்பது அப்பாடல். இக்கதையின்கருத்தும் இப்பாடற்கருத்தும் ஒன்ருகவே இருத்தலைக் காணலாம். இறைவன் திருப்பெயரை ஓதுவார்க்கு எல்லா நலங்களும் விளையும் என்பதும், அதனை அன்போடு நினைப்பவர் அரசபோகங்களைப் பெறுவர் என்பதும் இப்பாடலின் கருத்தாகும்.

அலறுக :

'சங்கரா சயபோற்றி போற்றி என்றும், அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும், ஆரூரா என்றென்றே அலரு நில்லே ' என்று கூறுகிருர் திருநாவுக்கரசர்.

" ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறலறிலை செய்வதொன் றறியேனே"

என்பது மணிவாசகர் திருவாக்கு. இறைவன் திருப்பெயர்களைக் கூறி அலற வேண்டும் என்று அப்பரும் மணிவாசகரும் கூறுவதை உணர வேண்டும். அருணகிரிநாதர் இறைவனது திருவடிகளைச் சிறிது பொழுதாவது நினையாதவர்களைச் சடம், கசடர், மூடர், மட்டி என்றெல்லாம் கடிந்துரைக்கின்ருர்.

" சரண கமலாலயத்தை அரைநிமிஷநேரம் மட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத
சட கசட மூட மட்டி "

என்பது அப்பாடற் பகுதியாகும்.

கூட்டொலி :

சமயக் கூட்டங்களில் எல்லோரும் கூடி இறைவன் திருப் பெயரைக் கூறும் முறைகளைப் பார்த்தே அரசியல் கூட்டங்களில் கூட்டொலிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. வந்தே மாதரம் என்று ஒருவர் சொல்ல, அனைவரும் கூறும் முறை நம் சமய மரபினைப் பார்த்தே தோன்றியிருக்கிறது.

" எல்லாம் அரன் நாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே "

என்று அருளிச்செய்த ஞானசம்பந்தர் இறைவன் திருப்பெயர் எங்கும் பரவிஞல்தான் உலகத் துன்பங்கள் தீரும் என்று கூறுவதைக் காண்கிறேம். சமயத் தொடர்பான கூட்டங்களிலும்

கடவுள் வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும் இறைவன் திருப்பெயரை எல்லோரும் கூடி ஒலிக்கும் கூட்டொலிமுறைக்கு மிக்கபயனுண்டு என்பதை அனைவரும் அறியவேண்டும்.

ஆவணிமூலம் :

இறைவனுடைய திருப்பெயரை இடைவிடாமல் சிந்தித்த பெரியோர் இருவரை ஆவணிமூலத் திருநாளில் நாம் நினைந்து போற்றக் கடமைப்பட்டுள்ளோம். மணிவாசகரும் வந்தியம்மையாரும் ஆவணிமூல விழாவோடு தொடர்புடைய அடியவர்கள்.

இறைவன் சிவஞானியாக விளங்கிய மணிவாசகரின் அன்புக்கு இரங்கிய நிலையையும், ஆதரவற்ற வந்தியின் அன்புக்கு எளிவந்த கருணையையும் இவ்விழா நினைவுறுத்துகின்றது. தொழிலாளிகளோடு தோழமை பூண்டு மண் சுமந்து கூலிகொண்டு பாண்டியனின் பொற்பிரம்பால் அடியும் பட்டு அடியவர்க்கு அருள்புரிந்த பெருங்கருணையை நினைந்து தொழுதற்குரிய ஆவணிமூல விழா, நமது தருமையில் நிகழும் சிறப்பு விழாக்களுள் முக்கியமானது. மதுரையில் நம் ஆதி குருமூர்த்திகள் திருக்கரங்களில் கண்ணுக்கினியபொருளாகஎழுந்தருளித் தருமையில் கோயில்கொண்டு விளங்கும் செந்தமிழ்ச் சொக்கேசனுக்கு நிகழும் ஆவணிமூல விழா நமது ஆதீனத்தில் குறிப்பிடத்தக்க விழாவாகும்.

நன் பாட்டுப் புலவனுய்ச் சங்கம் ஏறி நக்கீரரோடு வாதிட்டு நற்கனகக்கிழியைப் பெற்றுத் தருமிக்கு வழங்கிய அப்பெருமானது திருவிழா நாளில் செந்தமிழ்த் தொண்டு புரிந்துவரும் சிறந்த புலவர்களை அழைத்துப் பட்டமளித்துப் பாராட்டுவதை மரபாக அமைத்தருளினூர்கள் நமது கயிலைக்குருமணி அவர்கள். இது வரை இவ்விழாவில் இருபத்தெழுவர் நம் ஆதீனத்தில் பட்டம் பெற்றுள்ளனர்.

தமிழ்மொழிக் காவலர் :

சென்ற ஆண்டில் டாக்டர் திரு. பா. நடராசன் அவர்கள் 'பொருளியல் தத்துவப் பேரறிஞர்' என்னும் பட்டம் வழங்கப் பெற்ருர். இவ்வாண்டு சொக்கலிங்கப் பெருமான் சந்நிதியில் திரு. கி. இராமலிங்கனுர் அவர்கள் "தமிழ்மொழிக் காவலர்" என்ற பட்டமளிக்கப் பெற்றுள்ளார். செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால், கிடைத்திருக்கும் சிறப்பு விருதினைப் பெற்றுள்ள அன்பர் திரு. கி. இராமலிங்கனுர் தருமையாதீனத்தோடு நீண்ட நாளாக மிக நெருங்கிய தொடர்பும் பக்தியும் கொண்டவர்.

தருமையில் நமது தமிழ்க் கல்லூரியில் முதல்வராகச் சில ஆண்டுகள் பணியாற்றியவர். தமிழ் மொழிக்கு ஆக்கமான பணிகள் பலவற்றைச் செய்து வருபவர். திருச்சி, குடந்தை முதலிய பல நகரங்களில் நகரமன்ற ஆணையராக விளங்கித் தமிழை ஆட்சி மொழியாக்கும் முயற்சியை வலியுறுத்தியவர். ஒய்வுபெற்ற பிறகும் ஆட்சிமொழிக் குழுவில் இடம்பெற்று கலைச் சொற்கள் பலவற்றை உருவாக்கிய பெருமைக்குரியவர். இன்றும் நீதித் துறையின் சட்ட நூல்களை மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பரடிகளின் திருவாக்கைக் குறிக்கோளுரையாகக் கொண்டு தமிழ்த் தொண்டாற்றி வரும் திரு. கீ. இராமலிங்கனார் செய்துள்ள பணிகளைப் பாராட்டிச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் இன்று தமிழ்மொழிக்காவலர் என்ற பட்டமளித்துச் சிறப்பித்துள்ளது.

திரு. கீ. இராமலிங்கனார் அவர்களும் அன்பர்களும் ஆதீனக் கல்வி நிலைய ஆசிரியர்களும் மாணவர்களும் எல்லா நலன்களும் பெற்றுய்ய, செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

---

தருமையாதீனம்

## வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்,

### வைத்தீசுவரன்கோயில்.

சீகாழி வட்டம் – தஞ்சை மாவட்டம்.

# திருவிளக்கு அறக்கட்டளை நிதி

காணிக்கை செலுத்தியவர்களின் பெயர் விபரமும்

மாயூரம் இந்தியன் வங்கியில் உள்ள முதலீடுகள் விபரமும்

(மலர் 36, இதழ் 9, பக்கம் 471 இன் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| 101 | திரு. தண்டபாணிநாயுடு, கடலூர் | ரூ. 1000 |
| 102 | திரு. N. அனந்தராமன், பாண்டிச்சேரி | 1000 |
| 103 | திரு.S. N. M. பழநியப்பன், கோலாலம்பூர், மலேஷியா | 1001 |
| 104 | திரு. N. சம்பந்தம், சீர்காழி | 1000 |
| 105 | திரு. M. S. மீனாட்சி, தேனாம்பேட்டை, சென்னை 18 | 1001 |
| 106 | திரு. N. இராஜாமணி, செகந்திராபாத் | 1000 |
| 107 | திரு. S. ஸ்ரீதரன், குவைத் | 1000 |

# சனிப்பெயர்ச்சி

வியாகரண சிரோமணி,

திரு. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், தருமபுரம்.

நவக்ரஹங்கள் வான வீதியில் நகர்ந்து கொண்டிருக்கின்றன. அவைகளில் சனி பகவான் என்ற கிரஹம் மிகவும் மெதுவாக ஊர்ந்து செல்லும் கிரஹமாகும். அவருக்கு ஒரு ராசியைக் கடக்க 2½ ஆண்டுக் காலம் ஆகிறது. 12 ராசிகளையும் சுற்றிவர 30 ஆண்டுக் காலம் ஆகிறது. ஆகவே அவருக்கு "மந்தர்" என்றும் "சனைச்சரன்" என்றும் பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவர் சூரியனின் குமாரர். ஆனால் இருவருக்கும் பகை, சந்திரன் செவ்வாய் கிரஹங்களும் இவருக்குப் பகைக் கிரஹங்கள். ஆகவே இவருக்குக் கடகம், சிம்மம், விருச்சிகம் என்ற ராசிகள் பகை வீடுகள். மேஷம் நீசவீடாகும். விருஷபம், மிதுனம், கன்னி, துலாம் இவை நட்பு வீடாகும். மகரம், கும்பம் இவரது சொந்த வீடாகும். துலாம் இவருக்கு உச்ச வீடாகவும் ஆகிறது. இவருக்கு 7-ம் பார்வையோடு 3, 10-ம் பார்வையும் உண்டு.

இவர் இயற்கையில் ஒரு பாபக்ரஹம். ஆயினும் இடத்தைப் பொறுத்து நன்மையையும் செய்யக்கூடியவர். சனி கொடுத்தால் நிலைத்து நிற்கும் என்று சொல்லுவதுண்டு. பாபக்ரஹமானதால் இவர் லக்னத்திலிருந்து 3, 6, 8, 12 இவைகளில் இருப்பாரேயாகில் நன்மையைச் செய்வார். கெட்டவன் கெட்டிடில் தீதில்லை என்று கூறுவதுண்டு.

இவருக்கு ஒரு கால் நொண்டி; சோம்பேறி, தயவற்றவர்; பிடிவாதக்காரர், தாமஸ குணம் உள்ளவர். கோபக்காரர்; கருப்பு வஸ்திரம் அணிந்தவர், அசுத்தமான இடத்தில் வசிப்பவர், கருப்பு தானியங்களை வளர்ப்பவர், சாஸ்தாவின் ஆலயத்தில் வசிப்பவர் என்றவாறு கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இவர் நிலையைக்கொண்டு ஜாதகனுக்குமேற்கண்ட பலன்கள் ஏற்படும்.

இவர் ஆயுள்காரகர். இரவில் பித்ருகாரகர். ஆயுள், மரணம், துக்கம், பயம், அவமானம், ஏழ்மை, அடிமைத்தொழில், தீயவர்களின் நட்பு, கடன், இரும்பு, சிறைவாசம் இவைகளெல்லாம் இவர் நிலையைக்கொண்டு கூறவேண்டும். விருஷப லக்னத்துக்குத் தர்மகர்மாதிபதி (9, 10 வீட்டுக்குடையவர்) ஆவார். அந்த லக்னத்துக்கு இவர் விசேஷ நன்மையைப் பெரும்பாலும் செய்யக்கூடும்.

கோசாரபலன்என்பது ஜாதகத்தில் சந்திரலக்னத்திலிருந்து கிரஹங்களின் நிலையைக் கொண்டு ஏற்படும் பயன்களாகும்.

பொதுவாக எல்லாக் கிரஹங்களும் சந்திர லக்னத்துக்கு 12 1, 2-ஆம் பாவங்களில் வந்துகொண்டுதானிருக்கின்றன. ஆயினும் இவர் ஒவ்வொன்றிலும் 2½ ஆண்டுகள் வீதம் 3 ராசிகளில் 7½ ஆண்டுகளாகின்றபடியாலும் அவர் பொதுவாக க்ரூர கிரஹமாக இருப்பதாலும் அஞ்சுகிறோம். மேலும் சனி பகவான் 12ல் (முதல் 2½ ஆண்டு) 1ல், (2-வது 2½ ஆண்டு) 2ல், (3-வது 2½ ஆண்டு) 3ல், ஆகமூன்று இடங்களிலும் இருக்கும்போது இவர் நன்மை செய்வதில்லை என்று பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறது. 12ல் இருந்தால் அலைச்சல், சரீர சிரமம், தன நாசம், மனைவி குழந்தைகளுக்கு நாசம் இவற்றையும், 1ல் வரும்போது ரோகம், ஆசௌச காரியங்கள் இவற்றையும், 2ல் வரும்போது தன நாசத்தையும் கொடுக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது பொதுவாக உள்ளது. ஆனால் இவர் மிதுனம், கன்னி, துலாம், மகரம், கும்ப ராசிகளில் வரும்போது துன்பம் கொடுப்பதில்லை. மேலும் ஒரு ராசிக்கு 2½ நக்ஷத்ரங்கள். ஆகவே அவருக்கு ஏற்ற நக்ஷத்திரங்களில் வரும்போதும் தீமையைக் கொடுப்பதில்லை.

இப்போது புரட்டாசி 9 ஆம் தேதியில் கடகத்திலிருந்து சிம்ம ராசிக்கு வருகிறார். கடக ராசிக்காரருக்கு கடைசி 2½ வருடத் தொடக்கமாகும். சிம்ம ராசிக்காரருக்கு 2-வது 2½ ஆண்டுத் தொடக்கம். கன்யா ராசிக்காரருக்கு முதல் 2½ ஆண்டு தொடங்குகிறது.

பொதுவாக அவருக்குச் சிம்ம ராசி பகை வீடாக இருப்பினும் இந்த 2½ ஆண்டுகள் முழுவதுமே தீமை என்று சொல்ல முடியாது. மகம் 2-வது 3-வது பாதங்களிலும், பூரம் 2-வது 3-வது பாதங்களிலும், உத்திரம் 1-வது பாதத்திலும் இவர் சஞ்சரிக்கும்பொழுது சுப பலனையே தருவார். ஆக இந்த 2½ ஆண்டுக் காலம் நன்மை தீமை கலந்து ஏற்படுமேயொழிய முற்றிலும் தீமையே ஏற்படும் என்று சொல்லமுடியாது.

மேலும் கோசார பலன், அவரவர்களுக்கு அந்தந்தக் கிரஹங்களின் தசாபுத்திகளின் நன்மை தீமையை அனுசரித்தே ஏற்படும் என்று கூறவேண்டும்; நல்ல தசாபுத்தியாக இருக்குமானால் சனி சாரம் விசேஷமான கெடுதல் செய்யாது. ஆகவே கோசாரத்தை மாத்திரங்கொண்டு நன்மை தீமைகளைச் சொல்லுவது ஏற்கத் தக்கதல்ல. நம்மை ஆட்டிவைக்கும் கிரஹஸஞ்சாரங்களை ஆட்டி வைப்பவராகிய பரமேசுவரனை நாம் பக்தியுடன் உபாசித்தால் க்ரஹ தோஷங்கள் நீங்கி நன்மையை அடைவோம். இதில் ஐயமில்லை. சனிப்பெயர்ச்சி விழா 25—9—77 ஞாயிற்றுக்கிழமை நிகழவிருக்கிறது. அன்று எல்லாம் வல்ல சிவபரம்பொருளை வழிபட்டுப் பயன்பெறுவார்களாக.

திருநள்ளாறு

ஸ்ரீ போகமார்த்த பூண்முலையம்மை உடனுறை

ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமி திருக்கோயில்



தங்கக் கவசத்துடன்

ஸ்ரீ சனீஸ்வரபகவான்

சனிப்பெயர்ச்சி நாள் :- 25—9—77.

உ
சிவமயம்

# ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பதும் நம்நாட்டில் வழங்கும்பழமொழிகள். மக்களைத்திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்தி, சைவ - சமயப் பெருமைகளை அறியச்செய்து உய்விக்கவேண்டும் என்ற பெருங்கருணையால் தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தமது குருமூர்த்திகள் காட்டியருளிய வழியிலேயே தமது ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளிலும் பாடல்பெற்ற தலங்கள்தோறும் முறையான வழிபாட்டிற்கு வழிகாட்டி வருகிறார்கள். மாதந்தோறும் காவிரி வடகரைத் தலங்களில் வழிபாடு நடைபெறுகின்றன. உழவாரப்பணி விசேட அபிடேக ஆராதனைகள், தலத் திருப்பதிகங்களை அச்சிட்டு ஒதிவழங்குதல், சமயப்பிரசாரம் முதலியன ஆயில்யத்திருநாள் வழிபாட்டின் அங்கங்களாகும்.

பிங்கள ஸ்ரீ புரட்டாசித்திங்கள் 22-ஆம் நாள் (8-10-77) சனிக்கிழமை யன்று மாத ஜன்மநட்சத்திர மாதனின் திருக்கானூரில் வழிபாடு சிறப்புற நடைபெறும்.

திருக்கானூர் ஸ்ரீ சிவயோக நாயகி உடனுகிய ஸ்ரீ செம்மேனிநாதர் திருக்கோயிலில் காலை 10-மணி முதல் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும் நடைபெறும்.

---

வழிபாட்டின்போது

தருமபுர ஆதீனக் கல்லூரி முதல்வர்,

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள்

விரிவுரை நிகழ்த்துவார்கள்.

அனைவரும் வருக! வழிபட்டு உய்க! அரன் அருள் பெறுக!

# திருவாசகத்தில் சைவ சித்தாந்தம்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள் M, A., M. O. L.,

( மலர் 36, இதழ் 9, பக்கம் 463 இன் தொடர்ச்சி )

மறக்கருணை :

(6) உலகில் உள்ள சமயங்கள் பலவும், இறைவன் பாவி களைச் சபிக்கின்றான்; தீயவர்களைத் தண்டிக்கின்றான் எனப் பல செய்திகளைக் கூறக் காண்கின்றோம். இறைவன் கோபங்கொள் கின்றான், கோபம் கொண்டால் தண்டிக்கின்றான்; அழிக்கின்றான் என்றே பல சமயங்கள் கருதுகின்றன. ஆனால் சைவ சித்தாந்தமோ, கடவுள் ஒரோவழி தண்டிக்க நேரினும், அத் தண்டனையும்கூட அவர்தம் அளவற்ற பெருங்கருணைத் திறத்தி னாலேயே நிகழ்கின்றது என விளக்குகின்றது.

தந்தையும் தாயும், தாம்பெற்றெடுத்த மைந்தர்கள் தம் முடைய சொற்படி நடவாமல் தவறுகள் செய்வார்களாயின், ஒரோவழி அடித்தும் தண்டிப்பதுண்டு. அஃது, அவர்கள் தமது மைந்தர்களின் மீது வைத்துள்ள அளவற்ற அன்பின் காரண மாகவே அன்றிப் பிறிதொன்று பற்றியன்று (சித்தியார் 105).

" தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள், தம்சொல் ஆற்றின்
வந்திடா விடின் உறுக்கி வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர்; எல்லாம் பார்த்திடின் பரிவே யாகும்;
இந்தநீர் முறைமை யன்றோ? ஈசனார் முனிவும் என்றும் "

சிறந்த மருத்துவ அறிஞர் ஒருவர், ஒரு நோயாளருக்கு மிகவும் கசப்பான மருந்தை யளித்துக் கடும் பத்தியங்களை விதிக்கின்றார்; மற்றொரு நோயாளருக்கு மிகவும் சுவையான மருந்தைக் கொடுத்துப் பாலும் பழமும் உண்ணச் செய்கின்றார். வேறொரு நோயாளருக்கு மிகவும் துயரம் தருகின்ற அறுவை சிகிச்சை புரிகின்றார். இஃது அம்மருத்துவரின் விருப்பு வெறுப்பு,

அல்லது பரிவு சினம் என்பன பற்றி நிகழ்வதன்று! அவ்வவர்க்குள்ள நோயின் இயல்புக்கு ஏற்ப அமைவது.*

அம்முறையிலேயே, இறைவனும் உயிர்களுக்கு ஏற்றபெற்றி அருள் புரிந்து அவைகளை ஆட்கொள்கின்றான். (சித்தியார், 125) ஆதலின், ஒரோவழி இறைவன் தண்டனைகள் அளிப்பதும், அவன் நம்மீதுகொண்டுள்ள அளவற்ற பேரருட்பெற்றியினாலேயே ஆகும். "நிக்கிரகங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது" (சித்தியார் 105) என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. இதனை "மறக்கருணை" எனச் சைவ சித்தாந்த நூல்கள் கூறும்.

"ஏற்று வந்தெதிர் தாமரைத் தாள்உறும்
கூற்றம் அன்னதோர் கொள்கைஎன் கொள்கையே" 1

"உடையாய் கூவிப் பணிகொள்ளாது
ஒறுத்தால் ஒன்றும் போதுமே" 2

"நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயம் அன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ" 3

"காமன்உடல் உயிர்காலன் பல்காய் கதிரோன்......
தூய்மைகள் செய்தவா தோள் நோக்கம் ஆடாமோ" 4

என்பன போல வரும் திருவாசகப் பகுதிகளே, இறைவனின் மறக்கருணை பற்றிய விளக்கத்திற்கு ஏதுவாகும் எனலாம்.

### அடியார் உறவு:

(7) இறைவனின் அருளைப்பெறுவதற்கு அடியார் கூட்டுறவு வேண்டும் என்பதைச் சைவ சித்தாந்தம் பெரிதும் வற்புறுத்துகின்றது. "அடியவர்க்கு அன்பில்லார், ஈசனுக்கு அன்பில்லார்" என்பது சிவஞான சித்தியார். 'சிவபக்தர்களோடு இணங்குக;

* "A good physician, when a disease is so bad and so great that he has to cut off a hand, foot, ear, eye, or let it decay, does so in order to save the body. Looked at from the point of view of the member that he cuts off, he seems a cruel and merciless man; but when looked at from the point of view of the body, which he jntends to save, it turns outs that he is a fine and true man and does a work that is good and Christian, as far as it goes..." —MARTIN LUTHER.

அல்லாதாரோடு இணங்கற்க' எனக் கட்டளையிடுகின்றது சிவஞானபோதம். அப்பகுதிக்கு உரை வரைந்தருளும்போது மாதவச் சிவஞான சுவாமிகள், சிவபக்தர் அல்லாதாரோடு இணங்கியவழி விளையும் தீங்குகளை விளக்குவதற்கு,

"தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்,
ஆறுகோடி மாயா சக்திகள்
வேறு வேறு தம் மாயைகள் தொடங்கின;
ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர்;
விரத மேபரம் ஆக வேதியரும்
சரதம் ஆகவே சாத்திரம் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்..."

எனவரும் போற்றித் திருவகவல் திருவாசகப் பகுதியையே எடுத்துக்காட்டியுள்ளார். "உடையாள் உன்றன் நடுவிருக்கும்; உடையாள் நடுவுள் நீ இருத்தி; அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால், அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என்று, பல இடங்களிலும் மணிவாசகர் இறைவன் பால் வேண்டிக்கொள்வது அனைவரும் அறிந்தது.

செய்தனவே தவமாதல் :

(8) பெரியபுராணத்தில் வரும் சண்டேசுர நாயனார் வரலாறு, நாம் அனைவரும் அறிந்தது. சண்டேசுவரர், வேதியரும் தமது தந்தையும் ஆகிய எச்சதத்தனின் இருகால்களையும் தடிந்தார். அது மிகப் பெரிய குற்றமும் பாவமும் ஆகும். ஆயினும் சிவபிரான் அவருக்குத் திருவருளைச் சொரிந்து, அவரை அண்டர் தமக்கு அதிபன் ஆக்கித் 'தொண்டர்க்கு நாயகம்' என்னும் பேறும் அளித்துச் சிறப்பித்தார். இது பொருந்துமோ? என, நம்மனோர்க்கு ஐயம் எழலாம். அதனை நுண்ணிதின் எண்ணியுணர்ந்த சேக்கிழார் பெருமான்,

"வந்துமிகைசெய் தாதைதாள் மழுவால் துணித்தமறைச்சிறுவர்
அந்தஉடம்பு தன்னுடனே அரனார் மகனார் ஆயினார்;
இந்த நிலைமை அறிந்தார் யார்? ஈறி லாதார் தமக்கன்பு
தந்த அடியார் செய்தனவே தவமாம் அன்றே? சாற்றுங்கால்"

என வினவி விடையளித்துத் தெளிவுறுத்தி முடித்தருள்கின்றார். அப்போது சேக்கிழார் பெருமான் தம் திருவுள்ளத்தில் நினைவு

கூர்ந்தது, "சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன் கருணையினுல் தோள் நோக்கம் ஆடாமோ?" என்பன போன்ற திருவாசகப் பகுதிகளையே யாகும் எனலாம்.

விளையாட்டு:

(9) இறைவன் உலகைப் படைக்கின்ருன்; காக்கின்ருன்; அழிக்கின்ருன் என்பதனை, இறையுண்மையை உடன்படும் சமயங்கள் பலவும் கூறும். ஆயினும், இங்ஙனம் இறைவன் உலகைப் படைத்தலும் காத்தலும் அழித்தலும் எற்றுக்கு? என வினவினுல், எல்லாச் சமயங்களும் ஒரே வகையில் விடை தருவதில்லை?; தன் பொருட்டு என்றும், பிறர்பொருட்டு என்றும் வினைக்கு என்றும், விளையாட்டுக்கு என்றும் வெவ்வேறு சமயங்கள் வெவ்வேறு வகையில் விடைகள் புகலும்.

(1) தன்பொருட்டு எனின் வரம்பில் இன்பமுடைய முதல்வனுக்கு இச்செய்கையால் வரக்கடவதொரு பயன் இல்லை. (2) உயிர்களாகிய பிறர் பொருட்டு எனின், உயிர்களும் இறைவனும் அபேதமோ? பேதமோ? பேதாபேதமோ? என வினுநிகழும். (3) அபேதமாயின், அது தன்பொருட்டேயாம். (4) பேதமாயின் தன்னின் வேறுபட்ட உயிர்களுக்காக அதனைச் செய்வதற்கு ஓர் இயைபும் இல்லை. (5) பேதாபேதம் எனின், ஒரு பொருட்கே இரண்டு மாறுபட்ட தன்மை கோடல் பொருந்தாது. (6) இனி, வேறு பயன் எதுவும் கருதாமை ஆகிய வீணுக்கு எனின், அது பித்தர் செய்யும் தொழிலோடு ஒக்கும் (7) விளையாட்டுக்கு எனின் அஃது அறிவு வளரப்பெருத இளஞ்சிருர்களின் இயலும் செயலுமாக முடியும். "விளையாட்டு என்னின் சிறுமழவு இறையது ஆகும்" என்பது, பௌத்தர்கள்கூற்று. (சித்தியார் பரபக்கம் 87) எனவே இறைவன் உலகத்தைப் படைத்தலும், காத்தலும், அழித்தலும் விளையாட்டிற்காக என்னும் கொள்கை, சைவ சித்தாந்தத்திற்கு உடன்பாடு அன்று.

ஆயினும், சைவ சித்தாந்தச் சான்ருேர்கள் ஆகிய அருள் நந்தி சிவம், 'விளையாட்டு' என்னும் கொள்கையை அறவே மறுத்துவிடாமலும், முற்றிலும் தழுவிக்கொள்ளாமலும், ஓரளவில் ஏற்று உடன்பட்டுக் கொள்ளக் காண்கின்ருேம்.

"சொன்ன இத் தொழில்கள் என்ன காரணம்? தோற்றம் என்னின்
முன்னவன் விளையாட்டு என்று மொழிதலும் ஆம்; உயிர்க்கு
மன்னிய புத்தி முத்தி வழங்கலும், அருளால் முன்னே
துன்னிய மலங்கள் எல்லாம் துடைப்பதும், சொல்ல லாமே"

எனவரும் சிவஞான சித்தியார் சுபக்கச்செய்யுளில், "முன்னவன் விளையாட்டு என்று மொழிதலும் ஆம்" என எச்ச உம்மைகொடுத்து ஒரு வகையில் தழுவிக் கொள்கின்றார் அருள் நந்தி சிவம். 'ஏற்ற இவை அரன் அருளின் திருவிளையாட்டாக இயம்புவர்கள்' எனக் குறிப்பிடுகின்றார் உமாபதி சிவம் (சிவப்பிரகாசம் 18).

இங்ஙனம், இறைவன் முத்தொழில் இயற்றுதல் திருவிளையாட்டின் பொருட்டே என்னும் சிலர் கொள்கையினை, முழுவதும் இல்லாவிட்டாலும், ஓரளவேனும் சைவ சித்தாந்த ஆசிரியர்கள் தழுவிக்கொள்ள நேர்ந்தமை,

"காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" 1

"ஐயா! நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்" 2

எனத் திருவாசகம் திருவெம்பாவைப் பாடல்களில் (11, 12) மாணிக்கவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிச் செய்திருத்தலை, நினைவு கூர்ந்தமை பற்றியேயாம் எனத் துணிந்துகூறலாம்.

அற்றேல், முற்கூறிய குற்றம் என்னுவது? எனின், "ஈண்டு விளையாட்டு என்றது 'ஐங்கலப்பாரம் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டு' என்புழிப்போல, அத்துணை எளிதிற் செய்யும் ஆற்றலுடைமை குறித்தேயாகலின், அதனை அறிவில்லாத இளஞ் சிறுர்களின் செயலோடு ஒக்கும் என்றல் பொருந்தாது" என்று ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள் அரிய முறையில் அமைவுரை கூறியிருத்தல் அறிந்து மகிழத் தக்கது.

(தொடரும்)

---

## ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா

சந்தானசாரியருள் மூன்றாமவராகிய ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜைத் திருநாளாகிய உத்திர நட்சத்திரம் கூடும், நிகழும் பிங்கள ஆண்டு, ஆவணித்திங்கள் 29 ஆம் நாள் (14—9—77) ஞாயிற்றுக்கிழமை காலை, தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சமயாசாரியர் சந்தானசாரியர்களுக்கும், சிதம்பரம் திருக்களாஞ்சேரி சிங்காரத்தோப்பில் திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் உள்ள ஸ்ரீ மறைஞான சம்பந்தர் குருமூர்த்த ஆலயத்தில், ஸ்ரீ மறைஞானசம்பந்தருக்கும் அபிடேக ஆராதனைகளும், சிறப்பு வழிபாடும், சமய விரிவுரைகளும் நடைபெறும். அன்பர்கள் பங்குகொண்டு பயன்பெறுவார்களாக.

# மெய்கண்ட நூல்கள்

(ஆராய்ச்சி முன்னுரை)

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.,

## சைவ சமயம் என்பது எது?

சிவபரம் பொருளையே முதன்மையாகக்கொண்டு இயங்குவது சைவ சமயமாகும். உலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும் ஒப்ப நோக்கி அவற்றினிடத்து அன்பு செலுத்துவது இச்சமயத்தின் அடிப்படைக் கொள்கையாகும். "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார், அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்" எனவரும் அருள்வாக்கு இதனைப் புலப்படுத்தும். சைவம் என்ற சொல்வழக்குத் திருமூலர் திருமந்திரத்திலேயே முதன் முதல் காணப்படுகிறது. இதன் காலம் கி. மு. ஆறுயிரம் என்பர். இச் சொல் வழக்கைப் பின்வந்த மணிமேகலையும் திருவாசகமும் எடுத்தாளுகின்றன. இறைவன் ஈசன் என நின்ற சைவ வாதி" * என்னும் மணிமேகலை. "ஐயா றதனிற் சைவனாகியும்" "சைவா போற்றி தலைவாபோற்றி" என்னும் திருவாசகம்.

## தொன்மையும் சிறப்பும் :

உலகில் காணும் நாகரிக அமைப்பில் சிந்து வெளி நாகரிகமே தலைமையும் தொன்மையும் வாய்ந்தது என்பர். இங்குக் கண்ட அகழ்வாராய்ச்சிகளின் மூலம் இதன் தொன்மை தெரியவருகின்றது. கல்லினால் செய்த சிவலிங்கங்கள், நந்தி உருவங்கள், கோயில் அமைப்புக்கள், பூசைக்குரிய பொருள்கள் இவ்வகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டெடுக்கப்பெற்றுள்ளன. இவற்றில் காணும் எழுத்துக்களும் அமைப்புக்களும் இற்றைக்கு ஆறுயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவை என அறிஞர் கண்டுள்ளனர். இச்சிவ வழிபாடு உலகெங்கும் பரந்தும் விரிந்தும் அமைந்திருந்தமையை மேனாட்டறிஞர்களும் ஒரு படித்தாக ஒப்புக் கொள்கின்றனர். வேதங்களிலும் இதிகாசங்களிலும் சிவபெருமானைப் பற்றிய குறிப்புக்கள் மிகுதியும் உள்ளன. இவ்வாற்றான் இதன் தொன்மை நன்கு விளங்கும்.

---

* மணிமேகலை 27 - 86, 87.

### தமிழ் நூல்களில் சைவம் :

இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள் உண்மையே சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இவற்றிற்குரிய குறிப்புக்கள் பலவும் தொல்காப்பியம், திருக்குறள், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றில் ஆங்காங்குக் கூறப்பெற்றுள்ளன. "நுதல் விழி நாட்டத்து இறையோன்" நீலமணிமிடற்று ஒருவன்" "காரி உண்டிக் கடவுள்" என்பன சிவபெருமானைக் குறிக்கும் தொடர்களாகும். "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்பது அக்காலத் தமிழ் மக்கள் கொண்ட வினைபற்றிய கொள்கையாகும். "இம்மை மாறி மறுமையாயினும்" "இம்மைச்செய்தது மறுமைக் காமெனும்" என்பன போன்ற குறிப்புக்கள் உயிர், வினைவயத்தால் மாறி மாறி உடம்பெடுக்கும் இயல்பின என்பதை விளக்கும். "பால் வரை தெய்வம்" "வகுத்தான்" என்ற தொடர்கள், வினை, உயிர்களைத் தாமே அடைவதில்லை; அவற்றை உயிர்கள் மாட்டுச் செலுத்த ஒருவன் உளன் என்னும் கொள்கையைக் குறிப்பனவாகும். எனினும் இக்கொள்கைகளை இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்) என மூவகைப் படுத்தி முதற்கண் குறித்த பெருமை திருமூலர்க்கே உண்டு. "பதி பசு, பாசம் எனப் பகர் மூன்றில் பதியினைப் போல் பசு, பாசம் அநாதி" என்பது திருமந்திரம்.

### சமய நூல்கள் :

மேற்கூறியவாறு பரந்தும், விரிந்தும், இருந்த சைவ சமயம் சங்க காலத்தை அடுத்துப் பிற சமயத்தாலும், அரசியல் மாற்றத்தாலும் சற்றுத் தளர நேர்ந்தது. அத்தளர்ச்சியைப் போக்கி உயிர்ப்பைக் கொடுத்தவர்கள் நாயன்மார்கள் ஆவர். காரைக்கால் அம்மையார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர், ஐயடிகள் காடவர்கோன், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார் முதலிய அருளாளர்கள் இவ்வகையில் போற்றற்குரிய பேரருளாளர்கள் ஆவர். திருவருள் வழிப்பட்ட இவர்களின் அரிய தொண்டு பல்லாற்றானும் பாராட்டிப் போற்றுதற்குரிய தாகும். இவர்களுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரும் சமய குரவரெனப் போற்றப் பெறுவர். திருமூலர் முதலாகச் சேக்கிழார் ஈறாக உள்ள இருபத்தேழு பேரருளாளர்கள் தாம் இறைவன்பால் கண்ட இன்ப நுகர்வைப் பிறரும் பெற இசையொடு கூட்டியும், இயற்றமிழாகத் தனித்தும் பல்வேறு நூல்களை அருளியுள்ளனர். இவைகள் திருமுறைகள் எனப்பெறும். இறைவனை நேராகப் போற்றியும், அவ்வாறு போற்றற்குரிய நெறிகளை விளக்கியும்

கூறுதலின் இவற்றைத் தோத்திரமென்றும் கூறுவர். இவற்றின் பின்வந்தனவே சாத்திர நூல்களாகும். இவை வேத ஆகமப் பொருள்களை உட்கொண்டவை; உபதேச பரம்பரையில் வளர்ந்தவை. இவற்றின்பின் எழுந்தவை புராணங்களாகும். இவை திருவருள் நெறியில் தோய்ந்து வாழ்ந்தவர்களின் வரலாறுகளைக் கூறுவனவாகும். அடுத்து வந்தவை பிரபந்தங்களாகும். திருக்கயிலாய ஞான உலா உள்ளிட்ட நூல்கள் பிரபந்தங்கள் எனப் பெயர் பெறுமாயினும் பிற்காலத் தெழுந்த நூல்களையே பிரபந்தங்கள் என்ற வகையில் அடக்கிக் கூறுதல் மரபாயிற்று. இவ்வகையில் குருஞானசம்பந்தர், குமரகுருபரர், சிவஞான சுவாமிகள், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலியவர்கள் அருளிச்செய்த பிரபந்தங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றோடு இறைவன் எழுந்தருளியுள்ள திருப்பதிகளின் சிறப்பை விளக்கும் முகமாக எழுந்த தலபுராணங்கள் எண்ணற்குரியனவாகும்.

### மெய் கண்ட நூல்கள் :

சைவ சமயக் கோட்பாடுகளை அளவைகளாலும் பொருந்துமாற்றானும் விளக்க வந்தனவே மெய் கண்ட நூல்களாகும். இத்தகைய நூல்கள் 12ஆம் நூற்றாண்டு முதல் தோன்றி விரிவடைந்தன. இவ்வகையில் எழுந்த நூல்களில் பதினான்கு நூல்கள் சிறப்பாகக் குறித்துப் போற்றப் பெறுவனவாயின, அவையாவன :- 1. திருவுந்தியார், 2. திருக்களிற்றுப்படியார், 3. சிவஞானபோதம், 4 சிவஞானசித்தியார், 5. இருபா இருபஃது, 6. உண்மை விளக்கம், 7. சிவப்பிரகாசம், 8. திருவருட்பயன், 9. வினாவெண்பா, 10. போற்றிப் பஃறொடை, 11. உண்மை நெறி விளக்கம், 12 கொடிக்கவி, 13. நெஞ்சு விடு தூது, 14. சங்கற்பநிராகரணம் என்பன. இவற்றிற்கு முன்னும், பின்னும் இவ்வகையில் நூல்கள் எழுந்திருப்பினும் உபதேச பரம்பரையான் வந்த சிறப்பு இவற்றிற்கு உண்மையின் இவற்றையே சிறப்பாகப் போற்றினர்.

### அருளிய அருளாளர்கள் :

இம் மெய்கண்ட நூல்கள் வேத ஆகமப் பொருள்களையும், திருக்குறள் திருமுறை ஆகிய நூல்களையும் உட்கொண்டு எழுந்தவைகளாகும். இவற்றை அருளியவர்கள் இறைவனும் அவன் அருள் வழிபட்டு வளர்ந்த அருளாளர்களுமே ஆவர். மெய் கண்ட நூல்களை அருளிய அருளாளர்கள் இறைவனையே

குருவாகக் கொண்டு வளர்ந்த உபதேச பரம்பரையில் வந்தவர்கள். இவ்வுண்மையால்தான் சைவம் இறைவனையே முதல் குரு மூர்த்தியாகக் கொண்டு வளர்ந்தது எனக் கூறக் காரணமாயிற்று. இறைவன் திருநந்தி தேவர்க்கும், அவர் சனற்குமாரருக்கும், அவர் சத்திய ஞான தரிசினிக்கும், அவர் பரஞ்சோதியாருக்குமாக உபதேசித்தனர். இறைவனைக் குரு மூர்த்தியாகக் கொண்ட இவ்வுபதேச பரம்பரையில் வந்த நால்வரும் திருக்கயிலையில் வீற்றிருந்தவர்களாதலின் இவர்களை அகச் சந்தான ஆசாரியர்கள் என்பர். இவர்களில் நான்காமவரான பரஞ்சோதியார் மண்ணுலகில் வாழ்ந்த மெய்கண்டார்க்கும், அவர் அருள் நந்தி சிவாச்சாரியார்க்கும், அவர் மறைஞான சம்பந்தருக்கும், அவர் உமாபதி சிவாச்சாரியாருக்கும் உபதேசித்தனர். மெய்கண்டார் முதலாக வந்த இந்நால்வரும் இம்மண்ணுலகில் குருவருள் வழி நின்று அருள் உபதேசம் செய்தவர்களாதலின் இவர்களைப் புறச்சந்தான ஆசாரியர் என்பர். இவர்களுள் மறைஞான சம்பந்தர் என்பார் நூலாக ஒன்றும் அருளவில்லை என்பர். * எனவே புறச்சந்தான ஆசாரியர்களில் மூவரே நூல்செய்தவராகின்றனர்; இவர்கள் அருளிய நூல்கள் பதினொன்றே ஆகும். இவர்களுக்குக் காலத்தால் முற்பட்ட திருவியலூர் உய்யவந்த தேவ நாயனாரும், திருக்கடவூர் உய்ய வந்த தேவ நாயனாரும், மெய்கண்டாரின் மாணவரான மனவாசகங் கடந்தாரும் ஒவ்வொரு நூல்களைச் செய்ய மெய்கண்ட நூல்கள் பதினான்கு ஆயின. இவர்கள் அருளிய பதினான்கு நூல்களும் கால எல்லையுடன் பின்னர்க் குறிக்கப் பெற்றுள்ளன.

வரலாறு :

மேற் கூறியவற்றால் பதினான்கு நூல்களையும் அருளிய அருளாளர்கள் அறுவர் என விளங்கும். அவர்களின் வரலாற்றைச் சுருங்கக் காண்டல் பொருந்துவதாகும்.

### திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார் :

இவர் திருவியலூர் என்னும் ஊரினர். இறைவனே மானுடச் சட்டைதாங்கி உய்யவந்த தேவர் என்னும் பெயருடன் திருவியலூருக்கு எழுந்தருளினார். அவ்வூரில் வாழ்ந்த ஆளுடையதேவ நாயனார் என்பார் இவரைக் கண்டு வணங்கினார். அவர்தம் பரிபக்குவ நிலையைக் கண்ட இவர், அவருக்குத் தீட்சை செய்து

---

* சதமணிக் கோவை என்னும் நூல் மறைஞானசம்பந்தரால் அருளப்பெற்றது என்பர். தமிழ் இலக்கிய வரலாறு 14 ஆம் நூற்றாண்டு பக். 134. திரு. மு. அ.

அவர் பொருட்டுத் திருவுந்தியார் என்னும் நூலையும் செய்தருளினார்.

## திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் :

இவர் திருக்கடவூரில் வாழ்ந்தவர். ஆட்டுவாணிய மரபில் தோன்றியவர். திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரிடத்து அருள்பெற்ற ஆளுடைய தேவநாயனார் இவ்வூருக்கு எழுந்தருளினார். அவரைக் கண்ட இவர் வணங்கினார். ஆளுடைய தேவ நாயனார் இவர்தம் பக்குவத்தை உணர்ந்து தீட்சைசெய்து தம் ஞானாசாரியர் பெயரையே இவருக்குச் சூட்டியருளினார். ஒரு நாள் இவர் சிதம்பரத்திற்கு வழிபாடாற்றச் செல்ல, அவ்வூரிலேயே வழிபாடாற்றிக்கொண்டிருந்த ஒருவர் இவரைக்கண்டு வணங்கினார். அவர்தம் பரிபக்குவத்தை உணர்ந்த இவர் அவருக்குத் தீட்சை செய்தருளி திருவுந்தியாருக்கு வழிநூலாக திருக்களிற்றுப்படியார் என்ற நூலையும் செய்தருளி சின்னாளில் இறையடி அடைந்தார். இவ்விரு ஆசாரியர்களும் மெய்கண்டாருக்குக் காலத்தால் முற்பட்டவர்கள் ஆவர். (தொடரும்)

---

## கடிதம்

ஆறுமுக. நடராசன்,
34, தமிழ்க்குடில்,
தாசுகண்ட் நகர்

திருமுதுகுன்றம்,
(விருத்தாசலம்)
22—8—77.

செந்தமிழ்ச் சுவையென சிறந்திடும் எம்பிரான் நந்தமிழ் சிவபெருமான் திருவருட் துணைகொண்டு நும் தமிழ்ப்பணி சிறப்பதாக.

ஐயன்மீர், தங்கள் பார்வையின் கீழ் வெளிவரும் "ஞான சம்பந்தம்" இதழ் கண்டேன். மிகத் தெளிந்த அருட் பாதையினைக் காட்டி சிற்றுயிர்களையும் கடைத்தேற்றும் மிகப் பெரும் சிவத்தொண்டினைத் தங்கள் ஞானசம்பந்தம் செய்வது அறிந்து உள்ளம் நெக்குருகுகின்றேன்.

அத்தகு தெய்விக இதழினை என்போன்ற சிவபக்தர்களுக்கு அனுப்பி எம்மையும் தீநெறி விடுத்து தெய்வத் திருநெறி ஆட்பட வழிகாட்டுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

ஆறுமுக. நடராசன்.

# மலர்கள்

தலையில் சூட்டிக்கொள்ளலாம் எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட மலர்களுக்கெல்லாம் ஆரோக்கியத்தை உண்டாக்கும் குணங்கள் உண்டு.

❋

ரோஜா : இதன் சுகந்தம் இதயத்துக்கு வலிமையைத் தரும். நெஞ்சில் சளியை அகற்றும் குணம் ரோஜாவிற்கு உண்டு.

❋

மல்லிகை : கண் பார்வையைக் கூர்மையாக்கும். நேத்திரத்துக்கு நன்மை தரும்.

❋

செவ்வந்தி : கண்களுக்குக் குளிர்ச்சி தரக்கூடியது. முடி வளரப் பயன் தரும். இதை முழுப் பூவாகப் பயன்படுத்தவேண்டும். இதைப் பிய்த்து உபயோகித்தால் குணம் குறைந்துவிடும்.

❋

மகிழம்பூ : கண் நோய், தலைபாரம், தலைவலி முதலியவற்றை அணுகாமல் செய்யும்.

❋

ஜாதிப்பூ : இதைப் பிச்சிப்பூ எனக் கூறுவர். காலையில் சிறிது நேரம் கண்களில் ஒற்றி எடுத்தால் கண் வியாதிகள் நீங்குவதோடு கண் சிவப்பு மறையும்.

❋

தாழம்பூ : இதன் மணம் வாதநோயைத் தடுப்பதோடு இதயத்துக்கும் பலத்தைத்தருகிறது.

❋

அரளி : தலை அரிப்பு, துர்நீர் முதலியவற்றை நீக்கும் சக்தி கொண்ட இதற்குப் பேன் அணுகாமல் செய்யும் குணமும் உண்டு.

நன்றி. — *தினமணி கதிர்*. 10-6-77

# மாணவர்கட்கு அறிவுரை*

**கால நிர்ணயம் :**

கல்விக்கு மட்டும்தான் காலத்தை நிர்ணயித்துள்ளனர். எஞ்சினியர் படிப்பு என்ருல் 5 ஆண்டுகள், டாக்டர் படிப்பு என்ருல் ஐந்தரை ஆண்டுகள் என்று ஒவ்வொருதுறைப் படிப் பிற்கும் தனித்தனியாகக் கால நிர்ணயம் செய்துள்ளனர். நினைத்த நேரத்தில் படிப்புவராது. இளமையில்தான் கற்க வேண்டும். படிப்பதற்குரிய பருவம் போய்விட்டால் படிக்க முடியாது.

**அடக்கம் :**

பேராசிரியர்கள் முதல்வர்களுடைய கண் பார்வை, ஆன்மீக சக்தியுள்ளது. அதை மாணவர்கள் நம்பவேண்டும். தன்னிடத் தில் படிக்கும் மாணவர்கள் நன்ருக இருக்கவேண்டுமென்று ஆசிரியர்கள் நினைத்தால் அப்படியே மாணவர்களும் நன்ருக இருப்பார்கள். மாதா, பிதா, குரு தெய்வம். வீட்டில் பெற்ருேர் களுக்கு அடங்கி நடக்கவேண்டும். பள்ளி கல்லூரிகளில் ஆசிரியர்களுக்கு அடங்கி நடக்கவேண்டும். 'அடக்கம் அமரருள் உய்க்கும். அடக்கமின்மை இன்மை புகுத்திவிடும்' என்ருர் வள்ளுவர். 'எழுத்தறிவித்தவன் இறைவன்' என்றபடி ஆசிரியர் களை மாணவர்களாகிய நீங்கள் தெய்வமாக மதித்தால் உங்கள் வாழ்வும் உயரும்.

**சமதர்மம் :**

படிப்பு விஷயத்தில் சமதர்மம் பேசக்கூடாது. பள்ளியாரு லும் கெட்டிக்கார மாணவர்கள் சிலரே அதிகமார்க்குகள் வாங்கி யிருப்பார்கள். எனவே மற்ற மாணவர்கள் பள்ளித்தலைமை ஆசிரியரிடமோ, கல்லூரி முதல்வரிடமோ சென்று, 'மார்க்குகள் சில மாணவர்களிடமே குவிந்துள்ளன. இது சமதர்மம் அல்ல. எனவே மார்க்கை சமதர்ம முறையில் எல்லோருக்கும் பரவலாக விநியோகிக்கவேண்டும்' என்று கேட்கலாமா ?

* மாயூரம், அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரி யின் "இலக்கிய மன்றத்தில்" திருக்குறளார், திரு. வீ. முனிசாமி அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள்.

**பரீட்சையைத் தவிர்க்காதீர் !**

கல்லூரி என்பது கல்வி அறிவுபெருக்கும் இடம் என்று இயல்பாக நினைப்பதைவிட, திருவள்ளுவர் கூறியுள்ள உண்மை என்னவென்றால், 'மனிதனைப்பரிசோதனைசெய்து எதிர்காலத்தில் அவன் எப்படி ஆவான் என்று தெரிந்துகொள்ளும் இடம்தான் கல்லூரி' என்று சொல்லலாம். கல்லூரி ஒரு சோதனைக் கூடம். நகைக்கடையில் ஒருநகையைக்கொடுத்தால் 'அது பொன்னா? பித்தளையா' என்று உரசிப்பார்த்துக் கூறுகிறார்கள். அது போல் பையன்களை உரசிப்பார்க்கும் இடம்தான் கல்லூரி. 'பரீட்சைதான் மாணவர்களை உறைத்துப்பார்த்து மதிப்பிடும் உறைகல்' எனவே பரீட்சை எழுதுவதை மாணவர்கள் தவிர்க்கக்கூடாது.

**பெருமை :**

நீங்கள் சென்னை சென்று மூன்றுநாள் தங்கிவந்தாலே என்ன வாங்கிவந்தீர்கள் என்று உங்களைக்கேட்பார்கள். நான்கு ஆண்டுகள் கல்லூரியில் படித்துவிட்டுப் போகும் உங்களிடம் 'என்னவாங்கிவந்தாய்' என்றுகேட்டால் 'பட்டம்வாங்கிவந்தேன்' என்று பெருமையோடு சொல்லவேண்டாமா? அதை விட்டுவிட்டு 'எல்லோரும் பட்டம் வாங்கினார்கள். நான் வாங்காமல் வந்துவிட்டேன்' என்று சொல்வதா? எனவே மாணவர்கள் அனைவரும் படிப்பிலேயே கவனம் செலுத்தி நன்கு படித்து நன்றாய்ப் பரீட்சை எழுதிப் பட்டம் பெற்றுப் பெருமையும் புகழும் அடைய வேண்டும். நன்றி. — தினமலர். 5—9—77

---

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

The cynosure of attraction of this Holy temple, besides the divine grace always and to all available, is the clean and neat-surroundings for which it is famous. It also explains the purpose of the Divine inside the Sanctum - sanctorum, who is proclaimed and accepted as Holy Doctor- The administration should be thanked for its upkeep.

(Sd.) RAMA PRASADA RAO,
Judge,
Tamil Nadu High Court.

25—6—77

# திருமழபாடி
# தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்,

வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம்.ஏ.,

சோழவள நாட்டில் காவிரியின் வடகரையில் விளங்கும் பாடல்பெற்ற தலங்களில் 54-வது தலம் திருமழபாடி. திருச்சிராப் பள்ளி மாவட்டத்தில் அரியலூர் வட்டத்தில் கொள்ளிடத்தின் வடகரையில் இத்தலம் விளங்குகிறது. திருவையாற்றிற்கு வடமேற்கே சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. திருவையாற்றிலிருந்து வைத்தியநாதம்பேட்டைக்கு நகரப் பேருந்தில் சென்று அங்கிருந்து கொள்ளிட நதியைப் பரிசில் மூலம் கடந்து இத்தலத்தை அடையலாம். அரியலூர் திருவை யாறு ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துகளின் மூலமும் இத் தலத்தை அடையலாம். திருச்சிராப்பள்ளி விழுப்புரம் இரயில் மார்க்கத்தில் புள்ளம்பாடி இரயில் நிலையத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் இத்தலம் உள்ளது.

மழவர்பாடி :

முற்காலத்தில் வெள்ளாற்றிற்கும் வடகாவிரிக்கும் இடையில் உள்ள பகுதி மழநாடு என்றும் வடகரை மழபாடி நாடு என்றும் அதை ஆண்டுவந்த மன்னர்கள் மழவராயர் என்றும் அந் நாட்டில் உள்ளவர்கள் மழநாட்டார் என்றும் வழங்கப்பட்டு வந்ததாக நூல்கள் தெரிவிக்கின்றன. அரியலூர் மன்னர்கள் மழவராயர் என அழைக்கப்படுகின்றனர். மழவர்கள் சேரர் கிளையினராவர்.

கொல்லி மழவன் என்ற அரசன் முற்காலத்தில் இப்பகுதியை அரசுபுரிந்துள்ளான். பாடி - படைகள் தங்குமிடமாகும். மழவர் களின் சேனைகள் தங்கிய இடமாதல் பற்றி இத்தலம் மழவர்பாடி

என வழங்கப்பெற்றுப் பின் மழபாடி என மருவியதாகலாம். தேவாரத்தில் மழபாடி என்றே குறிக்கப்படுகிறது.

பனைமரங்களை மிகுதியாகக் கொண்டிருந்ததால் தாலவனம் எனவும் மார்க்கண்டேய முனிவர் பொருட்டு இறைவன் மழுவேந்தியாடி அருட்காட்சி வழங்கிய காரணத்தினால் மழுவாடி என்றும் பெயர் வழங்கலாயிற்று எனத் தலபுராணம் தெரிவிக்கிறது. "மருமலர் மழைகள் தூவி வானவர் வணங்கி ஏத்தக், கருமழை யனைய கூந்தல் கவுரி கண்டு இனிது போற்றப், பொருமழு அங்கைஏந்திப் புனிதன் நின் றாடலாலே, பெருமழு வாடியென்னும் பெயர் பெறும் அந்த மூதூர்" என்பது தல புராணம்.

கோயிலமைப்பு:

கொள்ளிடப் பேராற்றின் கவின்மிகு வடகரையில் கிழக்கு நோக்கி இத்திருக்கோயில் விளங்குகின்றது. இத்தலத்தில் கொள்ளிடம் உத்திரவாகினியாக - வடக்குநோக்கிச் செல்கிறது. ஏழு நிலைகளோடு கூடிய இராஜ கோபுரத்துடனும் மூன்று பிராகாரங்களுடனும் திருக்கோயில் பெருங் கோயிலாகக் காட்சி யளிக்கிறது. இராஜகோபுரத்தை அடுத்து உள்ளே சென்றதும் கொடிமரம் நந்தி பலிபீடங்கள் விளங்குகின்றன. இரண்டாவது கோபுர நிலை வாயிலைக் கடந்தவுடன் மிகப்பெரிய அலங்கார மண்டபம் காட்சி தருகிறது. இம்மண்டபத்தில் அடுத்தடுத்து இரண்டு நந்திகள் சந்நிதியில் உள்ளனர். மண்டபத்தின் தென் பகுதியில் கோயிலின் முதற் பிராகாரத்தின் தென்புறத்தில் அகோர வீரபத்திரர் விநாயகர் முருகன் கோயில்கள் உள்ளன.

மூன்றாவது கட்டைக் கோபுர வாயிலைக் கடந்தவுடன் விநாயகர் காட்சி தருகிறார். மிகப்பெரியதாகவும் அழகியதாகவும் அமைந்துள்ள மகாமண்டபம் சித்சபை மண்டபமாகக் காட்சி தருகிறது. மண்டபத்தின் தென்பால் சப்தமாதாக்கள் விளங்கு கின்றனர். மூன்று புறங்களிலும் திருமாளிகைப், பத்தியோடு கூடிய மண்டபம் திகழ்கிறது. அழகிய உட்பிராகாரம். தென் பகுதியில் தலத்திருப்பதிகக் கல்வெட்டுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. மேற்குப் பிராகாரத்தில் கன்னி மூலையில் தல விநாயகர் காட்சி தருகிறார். இத்தலத்தின் தனிச் சிறப்பிற்குரிய மூர்த்தியாக விளங்கும் ஒரேகல்லிலமைந்த பெரிய சோமாஸ்கந்த மூர்த்தியை வழிபடலாம். முருகன் திருமால் மகாலக்ஷ்மி திருவுரு வங்களும் உள்ளன. அடுத்து, பரவையாருடன் சுந்தரர் எழுந் தருளி விளங்குகிறார். தலமரம் - பனை இங்குள்ளது. வடபால்

சொக்கநாதர் மீனாட்சி கோயில் உள்ளது. இத்தலபுராணத் தொடர்பான முனிவர்கள் பலர் திருவுருவங்கள் உள்ளன. வடக்குப்பிராகாரத்தில் துர்க்கைகோயிலும் ஜுரகரேசுவரர் கோயிலும் உள்ளன. அடுத்து சண்டேசுவரர்கோயில் உள்ளது. வழிபட்டுக்கொண்டே மகாமண்டபத்தின் வடபகுதியை அடைகிறோம். காலசம்காரமூர்த்தி கோயிலும் அருள்மிகு பாலாம்பாள் கோயிலும் அதையடுத்து நடராஜப்பெருமான் எழுந்தருளியுள்ள சித்சபையும் உள்ளன.

கர்ப்பக்கிருக விமானமும் சோமாஸ்கந்தர் கோயிலுமாக இணைந்து இருபெருங் கோயிலாக உள்ளது. மிகப்பெரிய சோமாஸ்கந்தர் மண்டபத்தில் விநாயகர் தெற்கு நோக்கி உள்ளார். அனைத்து உற்சவ விக்கிரகங்களும் இங்கு வைக்கப் பெற்றுள்ளன. வட்பால் சுவாமிகோயிலின் அர்த்த மண்டபத்தை அடைகிறோம். சுவாமிசந்நிதி மிக்க விளக்கத்தோடு திகழ்கிறது. அருள்மிகு வைத்தியநாதரை வழிபட்ட மனநிறைவோடு நிற்கிறோம்.

" பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே "

என்ற சுந்தரர் அருளிய புகழ்பெற்ற தேவாரத்திருப்பாடலை வாய் மணக்க ஓதி வெளிவருகிறோம்.

சுவாமி கோயிலின் இடதுபாகத்தில் அம்பாள் கோயில் உள்ளது அம்பாள் சந்நிதியும் கிழக்குநோக்கி உள்ளது. இரண்டு பிராகாரங்கள். இது தனிக்கோயிலாக உள்ளது. சந்நிதியில் இலக்குமி தீர்த்தம் உள்ளது. அழகிய முன்மண்டபத்தோடு அழகுற விளங்குகிறது. சந்நிதியில் நம்மனம் அன்னையின் அடிமலர்களில் குவிகிறது. வழிபட்டுக்கொண்டு வெளியே வருகிறோம்.

## மூர்த்திகள் :

இத்தலத்தில் விளங்கும் பெருமானுக்கு ஸ்ரீ வைத்தியநாதர், ஸ்ரீ வச்சிரத்தம்பேசுவரர், அருள்மிகு வைரத்தூண் நாதர், மழுவாடீசர் என்னும் பெயர்கள் வழங்குகின்றன. இத்தலத்தில் அம்பிகை கோயில்கள் இரண்டு உள்ளன. அருள்மிகு பாலாம்பிகை, சுவாமி கோயிலில் நடராஜர் சந்நிதிக்கு அருகில் தெற்கு

நோக்கி விளங்குகிறார். பிரதான அம்பாள் கோயில் சுவாமி கோயிலுக்கு வடபால் கிழக்கு நோக்கி உள்ளது. அம்பிகைபெயர் அருள்மிகு அழகம்மை வடமொழியில் சுந்தராம்பிகை. விநாயகர், சுந்தரவிநாயகராவார்.

சந்திரனுக்குள்ள கய நோயைப் போக்கியதால் இறைவர் வைத்தியநாதர் எனப் பெறுகிறார். மழபாடி மருந்தீசர் எனத் தேவாரப் பாடல் இப்பெயரைக் குறிப்பிடுகிறது. புருஷாமிருக முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற சிவலிங்கத்தைப் பிரமன் பெயர்த்தெடுக்க முயன்ற போது வச்சிரத்தம்பமாக இறைவன் விளங்கிய காரணத்தால் வச்சிரத்தம்பேசுவரர் என வழங்கப் படுகிறார். திருநாவுக்கரசு சுவாமிகள் 'மழபாடி வைரத்தூணே' எனப் போற்றுவதை அவர்தம் தேவாரத் திருப்பதிகத்துட் காணலாம். சேக்கிழார் " மழபாடி வயிரமணித்தூண் அமர்ந்து மகிழ்கோயில் " எனக் கூறலையும் காணலாம். 'மழபாடியுள் மாணிக்கம்' எனச் சுந்தரர் போற்றுகிறார்.

இத்தலத்தில் ஒரே கல்லிலமைந்த சோமாஸ்கந்தர் திருவுருவம் காணத்தக்கது.

தீர்த்தம் - இலக்குமி தீர்த்தம். அம்பாள் சந்நிதிக்கு எதிரில் உள்ளது. திருமகளுக்கு ஒரு முனிவர் சாபத்தினால் ஏற்பட்ட சருமநோயை நீக்கியதால் இத்தீர்த்தம் இலக்குமியின் பெயரால் விளங்குகிறது. சிவகங்கை - கொள்ளிட நதியுடன் கலந்து விட்டது. கொள்ளிடம் - இத்தலத்தில் உத்திர வாகினியாகச் செல்கிறது. தலமரம் - பனை

தலப்பெருமைகள் :

இந்திரன் திருமால் முதலியோர் வழிபட்ட சிறப்புடையது. மார்க்கண்டேய முனிவருக்கு வைகாசி விசாகநாளில் சிவ பெருமான் மழுவேந்திக் காட்சி கொடுத்தாடியது. இலக்குமி சந்திரன் இவர்களுக்கு ஏற்பட்ட நோய் நீங்க அருள்செய்தது. நந்திகேஸ்வரருக்கும் சுயசாம்பிகைக்கும் திருமணம் நிகழ்ந்த தலம். இத்திருமண ஐதிக நிகழ்ச்சி ஆண்டுதோறும் பங்குனி மாதம் புனர்பூச நாளில் பெருவிழாவாக இத்தலத்தில் நிகழ்ந்து வருகிறது. அன்றைக்கு ஐயாறப்பரும் இத்தலத்திற்கு எழுந்தருளிவந்து காட்சி கொடுப்பார். இத்திருமண விழாவின் 27 ஆம் நாள் திருவையாற்றில் நிகழும் சப்தஸ்தான விழாவிற்கு நந்தி கேசுவரரும் எழுந்தருளிச் சென்று அருட்காட்சி நல்குவர்.

( தொடரும்)

# அறநிலையம் பற்றிய வரவேற்கத்தக்க கொள்கை

## தினமணி தலையங்கம் (26—8—77)

தமிழ் நாட்டிலுள்ள ஆலய சொத்துக்கள் நிர்வாகம் பற்றி பல புகார்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஆலய வருமானங்கள் சரியான முறையில் பயன் படுத்தப்படவில்லை. ஆலயத்துக்குச் சொந்தமான இடங்கள் அத்துமீறி உபயோகிக்கப்பட்டிருக்கின்றன என்பது முக்கிய புகார்களாகும். இந்தப் புகார்கள் முற்றிலும் மிகையானவை என்று தள்ளிவிட முடியாது. கடவுள் என்பது தனி மனிதர்களின் சொந்த விஷயம். கடவுள் இல்லை என்று வாதம் செய்பவர்களும், இந்த நாட்டில் இல்லாமல் இல்லை. தமிழ்நாட்டிலோ, இந்தியாவிலோ மட்டும்தான் இப்படி இருக்கிறதென்பதில்லை. உலகத்தில் பல்வேறு பாகங்களில், வெகுகாலமாகவே "கடவுளைக்காட்டு" என்றுசவால் விடுபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், இது தனிப்பட்ட சிலரின் அல்லது கோஷ்டியின் பொழுதுபோக்காகத்தான் இருந்துவந்திருக்கிறது.

உலகத்தில் உள்ள எந்தநாட்டிலும் கடவுள் நம்பிக்கை என்பது ஆழமாக வேரூன்றித்தான் இருக்கிறது ஒரு சிலருடைய பிரசாரம் இந்த நம்பிக்கையை அசைக்க முடியவில்லை. சர்க்கார்களும் இந்த விஷயத்தில் தலையிடுவதில்லை. இந்தியா சம்பந்தப்பட்டவரையில், இங்குள்ள சர்க்கார் மதச்சார்பற்ற கொள்கையையே பின்பற்றிவருகிறது. அதாவது, சர்க்காருக்குத் தனி மதம் என்று எதுவும் கிடையாது. எல்லா மதங்களையும் அவர்கள் சமமாகவே பாவிக்கிறார்கள். எந்த மதத்தினரும் தமது நம்பிக்கைகளையும், கோட்பாடுகளையும் பின்பற்ற எந்த விதமான தடையும் விதிக்கப்படவில்லை. கடவுள் எங்கே என்று கேட்பவர்களுக்குக்கூட எந்தத்தடையும் இல்லை.

ஆலயங்களின் பராமரிப்புக் கென்று பல தர்மவான்கள் சொத்துக்களை எழுதி வைத்திருக்கிறார்கள். அறக்கட்டளைகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்த அறக்கட்டளைகளின் மூலம் கிடைக்கும் வருமானங்களைக் கட்டளைகளின் நோக்கத்திற்கு முரணில்லாதவிதத்தில் பயன்படுத்திக்கொள்கின்றனரா? என்று பார்த்துக்கொள்வது சர்க்காரின் பொறுப்பாகும். ஆலயங்களில் டிரஸ்டிகள் அல்லது அறங்காவலர்கள் நியமிக்கப்படுவதின் நோக்கம் இதுதான்.

ஆனால், கொஞ்ச காலமாக கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டுவருகிறார்களென்றும்

இதனால் ஆலய சொத்துக்கள் தனிப்பட்டவர்களின் நலன்களுக்கு உபயோகிக்கப்படுகின்றனவென்றும் பரவலாகக் கருதப்பட்டு வருகிறது. ஆலய நிலங்கள் அத்துமீறி மற்றவர்களால் ஆக்ரமிக்கப்படுகின்றன. ஆட்சி நடத்தியவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை இல்லாததுதான் காரணம் என்று சொல்லப்பட்டது. அவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கிறதா, இல்லையா என்பது மனச் சாட்சி பொறுத்த விஷயம். ஆனால், பொது வாழ்வில் யாராயிருந்தாலும் சில நெறிகளைப் பின்பற்றித்தான் ஆகவேண்டும். மற்ற விஷயங்களில் தலையிடக் கூடாதென்பது தேசத்தின் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையாயிருக்கும் வரையில் அதற்கு முரணான காரியங்கள் அனுமதிக்கப்படலாகாது. ஆனால் தமிழ் நாட்டில் சிலருடைய குறுகிய மனப்பான்மை காரணமாக இந்தக் கொள்கை அறவே புறக்கணிக்கப்பட்டது.

தமிழ் நாட்டில் புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் இந்த நிலைமையைச் சீர்படுத்துவார்கள் என்று நம்ப இடமிருக்கிறது. புதன்கிழமையன்று த. நா. அசெம்பிளியில் ஹிந்து அறநிலைய இலாகா மானியக் கோரிக்கையின் மீது நடந்த விவாதத்திற்குப் பதிலளித்து முதன்மந்திரி எம். ஜி. ராமச்சந்திரன் பேசுகையில் இதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் ஆக்ரமிக்கப்பட்டிருப்பது பற்றியும், ஆலய சொத்துக்கள் துர்விநியோகம் பற்றியும் தன்னிடம் பல புகார்கள் வந்திருக்கின்றன என்றும், இந்நிலைமையைச் சீர்படுத்துவதற்குச் சர்க்கார் சீக்கிரத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களென்றும் முதல் மந்திரி அறிவித்திருக்கிறார். தவறிழைத்தவர்கள் யாராயிருந்தாலும் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் உறுதி கூறியிருக்கிறார் ஆலய நகைகள் ஏதாவது காணாமல் போயிருக்கின்றனவா என்பதைக் கண்டுபிடிப்பதுபற்றியும் பரிசிலனை செய்யவேண்டுமென்று சபையில் வற்புறுத்தப்பட்டது. அதையும் பரிசிலனைசெய்ய முதல்வர் சம்மதம்தெரிவித்திருக்கிறார்.

மக்கள் மத நம்பிக்கைகளிலும், வாழ்க்கையிலும், சர்க்கார் தலையிடமாட்டார்கள். மக்களின் மதநம்பிக்கைகளைப் புண்படுத்தக் கூடிய எதையும் சர்க்கார் செய்யமாட்டார்கள் என்று முதல்மந்திரி உறுதி கூறியிருப்பது தமிழ் நாட்டிலுள்ள 99 சதவிகிதமக்களுக்குப் பெறும் ஆறுதலை அளிக்கும்என்பதில் சந்தேகமில்லை. ஆலயங்கள் அறக்கட்டளைகள் விஷயத்தில் கொஞ்சகாலமாகக் காணப்பட்டுவந்த இருளை நீக்குவோம் என்று முதல் மந்திரி உறுதியாக அறிவித்திருப்பதைப் பாராட்டுகிறோம்.

நன்றி. —தினமணி, 26—8—77.

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் வழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 26-ஆவது குரு மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நட்சத்திர வழிபாடு 14—8—77 ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது. திருநெய்த்தானம் ஸ்ரீ பாலாம்பிகை உடனுகிய ஸ்ரீ நெய்யாடியப்பர் திருக்கோயிலிலும், திருப்பெரும்புலியூர் ஸ்ரீ சௌந்தர நாயகியம்மை உடனுகிய ஸ்ரீ வியாக்ர புரீசுவரர் திருக்கோயிலிலும் காலை 8-மணி அளவில் தொடங்கி விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் வழிபாடு நடைபெற்றது. நண்பகலில் தருமை யாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ அறம் வளர்த்த நாயகி உடனுகிய ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் வழிபாடு நடைபெற்றது. ஐயாறப்பருக்கு புனுகு சாத்தி வழிபாடுசெய்ய பெற்றது. இத்தலங்களின் தேவாரத் திருப்பதிகங்கள் வழிபாட்டின்போது பாராயணம் செய்யப் பெற்றன. அவ்வத்தலச் சிறப்புக்களுடனும் குறிப்புரையுடனும் அச்சிட்டு வெளியிடப் பெற்று வழிபாட்டின்போது அன்பர்களுக்கு 'தேவாரத் திருப் பதிகங்கள்' என்ற நூல் வழங்கப்பெற்றது.

மாலை 7-மணி அளவில் திருவையாற்றுத் திருக்கோயிலில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்களாலும், வித்துவான் திரு. சுவர்ணகாளீசுவரன் அவர்களாலும் சமய விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டும் சமய விரிவுரைகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

## தருமையாதீனத்தில் ஆவணிமூல விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனம் ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு ஆவணிமூலத்திருநாளில் (22, 23, 24—8—77) விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. 24—8—77 அன்று ஆவணி மூலம்; அன்று சொக்கநாதப் பெருமானுக்குக் காலை மாலை இரு வேளைகளிலும் சிறப்பு வழிபாடு நடந்தது. பெருமான் மணிவாசகருக்காக, நரிகளைக் குதிரைகளாக்கியும் குதிரைகளை

நரிகளாக்கியும் திருவிளையாடல் புரிந்த நாள் ஆவணி மூலத் திருநாள். இந்நாளில் தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சிறந்த அறிஞர் ஒருவருக்குப் பட்டமளித்துப் பாராட்டுவதை அனைவரும் அறிவர்.

மாலை வழிபாட்டின்போது இவ்வாண்டு சென்னை திரு. கி. இராமலிங்கனார் எம். ஏ. அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் "தமிழ் மொழிக் காவலர்" என்ற சிறப்புப் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி ஆசி வழங்கியருளினார்கள். வழிபாட்டிற்கு மாயூரம் முதலிய இடங்களிலிருந்து அன்பர்கள் பலர் வந்திருந்தனர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசி அருளினார்கள்.

## கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா

ஆவணி மூலத் திருநாட்களில் ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நடைபெற்றது. 22—8—77 திங்கட்கிழமை மாலை 3-மணியளவில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளின் ஆண்டுவிழா நடைபெற்றது. விழா, கந்தபுராணத்திருநாளாகக் கொண்டாடப்பட்டது. விழா நாள்தோறும் திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கிற்று.

ஆதீனக் கல்லூரி முதல்வர் திரு. வி. சா. குருசாமிதேசிகர் M.A. அவர்கள் 'திருமுருகன் அவதாரம்' என்றதலைப்பிலும், பேராசிரியர் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ. அவர்கள் 'திருமுருகன் போர்" என்ற தலைப்பிலும் ஆதீன உயர்பள்ளித் தமிழாசிரியர் திரு. கா. ம. கண்ணப்பன் அவர்கள் 'திருமுருகன் அருள்' என்ற தலைப்பிலும் விரிவுரை யாற்றினார்கள். ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி மாணவ மாணவியர்களின் கலைநிகழ்ச்சி யோடு விழா இனிது நிறைவுற்றது.

23—8—77 செவ்வாய்க்கிழமை மாலை 3-மணியளவில் ஆதீன வேத சிவாகமபாடசாலை, தேவாரப் பாடசாலைகளின் ஆண்டு விழா நடைபெற்றது. இவ்விழா பெரிய புராணத் திருநாளாகக் கொண்டாடப்பட்டது. பேராசிரியர் திரு. வி. சபேசன் அவர்கள் 'சிவனருட் செல்வர்' என்ற தலைப்பிலும் பேராசிரியை திருமதி ப. நிலா எம். ஏ. அவர்கள் "சிவனருட் செல்வியர்" என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினார்கள். ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்களின் கலைநிகழ்ச்சியோடு விழா இனிது நிறைவுற்றது.

24—8—77 புதன்கிழமையன்று ஆதீனப் பல்கலைக் கல்லூரியின் ஆண்டுவிழா நடைபெற்றது. இவ்விழா திருவிளையாடற் புராணத் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்திற்கு எழுந்தருளி பட்டமளிப்பு விழா ஆசியருளினார்கள். அடுத்து ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டறிக்கைகள் வாசிக்கப் பெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆதீனக் கல்வி நிலைய மாணவமாணவிகளுக்குப் பரிசுகள்வழங்கி ஆசியருளினார்கள். பல்கலைக் கழகத் தேர்வில் முதன்மை பெற்ற கல்லூரி மாணவி செல்வி வசந்தாவிற்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் பொற்பதக்கம் வழங்கியருளினார்கள். மேலும் சைவசித்தாந்த வகுப்பில்பயின்று முதல் மூன்று தகுதிகள் பெறும் மாணவர்க்கு ரூபாய் 500 க்குமேல் ரொக்கப் பரிசுகளையும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத். காசிவாசி. முத்துக்குமார சாமித் தம்பிரான் சுவாமிகள் அளிக்கும் கல்லூரி வெள்ளி விழா நினைவு ஸ்ரீ குமரகுருபரர் கட்டுரைப் போட்டிப் பரிசுகளையும் பல்கலைக்கழகத் தேர்வில் முதன்மைபெறும் மாணவர்க்கு மாயூரம் வட்டம் முன்னாள் கோட்டாட்சியர் திரு. ஆர். வீரராஜு அவர்கள் அளிக்கும் ரூ. 250 வெண்பொற்காசு பரிசுகளையும் மற்றும் பல பரிசுகளையும் வழங்கி யருளினார்கள்.

பேராசிரியர், திரு. இரா. செல்வக்கணபதி M. A. அவர்கள் ' பிட்டுக்கு மண் சுமந்த பேரருள் ' என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்கள். அடுத்து ' தமிழ்மொழிக்காவலர் ' என்ற சிறப்புப் பட்டம் பெற்ற சென்னை திரு. கீ. இராமலிங்கனார் M. A. அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். தொடர்ந்து இந்திய அரசு கள விளம்பரத்துறையினரால் ' புன்னகை ' என்னும் திரைப்படம் திரையிடப்பட்டது. நன்றியுரை, வாழ்த்துக்களுடன் விழா இனிது நிறைவுபெற்றது. அன்பர்கள் பலர் விழாவிற்கு வந்து விரிவுரைகளைக் கேட்டுப் பயன் பெற்றனர்.

## தருமையாதீனத்தில்
## கயிலாய தரிசன நினைவுநாள் விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருக்கயிலாய மலையைத் தரிசித்து மீண்டதை அனைவரும் அறிவர். அத்தரிசன நினைவு நாள் விழா ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. திருக்கயிலாய தரிசனத்தின் 18 ஆவது ஆண்டுவிழா

14—8—77 ஞாயிற்றுக் கிழமையன்று 26 ஆவது குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாணையின்வண்ணம் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அன்று சொக்கநாதப் பெருமான் பூஜை மடத்தில் திருக்கயிலாயத் திருவுருவப் படத்திற்குக் காலை மாலை இருவேளைகளிலும் சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது. திருமுறைப்பாராயணம் அகண்ட பாராயணமாக நிகழ்த்தப் பெற்றது. நண்பகலில் மாகேசுவரபூஜை நடைபெற்றது. மாலையில் சமய விரிவுரை நிகழ்ந்தது. வித்துவான். திரு. மு. ஆறுமுகதேசிகர், வித்துவான். திரு. வி. சபேசன், வித்துவான். திருமதி. ப. நீலா M. A. திரு. மு. சிவச்சந்திரன் M. A. திரு. கா. ம. கண்ணப்பன் ஆகியோர் முறையே, 'கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி' 'அப்பர் தேவாரத்தில் கயிலைக்காட்சி' 'சுந்தரர் தேவாரத்தில் கயிலைக் காட்சி' 'பெரிய புராணத்தில் கயிலை காட்சி' 'திருக்கயிலாய ஞான உலா' என்ற தலைப்புக் களில் விரிவுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டுப் பயன் பெற்றனர். இரவு வெள்ளியிரதத்தில் திருக்கயிலாயத் திருவுருவப்படத் திருவீதியுலா திருமுறைப் பாராயணத்துடன் நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் உடன் எழுந்தருளினார்கள். அன்பர்கள் பலர் திருவீதியுலாவில் கலந்து கொண்டு வழிபட்டுப் பயன் பெற்றனர்.

## சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் அப்பர் குருகுலம் தொடக்க விழா

சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 19—8—77 அன்று சச்சிதானந்தம் பிள்ளை சதாபிஷேக நினைவு அப்பர் குருகுலம் தொடக்க விழா இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. M. K. பாலசுப்பிரமணியம், I. A. S. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழா காலை 6-30 மணி அளவில் வைதீக முறையில் ஸ்ரீ விநாயகர் வழிபாட்டுடன் தொடங்கப்பெற்றது. மாலையில் 3-30 மணி அளவில் அறநிலைய ஆணையர் அவர்கள் குருகுலத்தைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரையில் :-

"தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதீன நிலையத்திற்கு இரண்டு தடவைகள் வந்திருக்கிறேன். முதல் தடவை அழைக்காமல் வந்தேன். இப்பொழுது இரண்டாவது தடவை அழைத்து வந்திருக்கிறேன். நிலையத்தின் சார்பில்

சமயச் சொற்பொழிவுகளும், மாத வழிபாடுகளும், கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழாக்களும் நடைபெறுவது அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். மடத்தின் சார்பில் அப்பர் குருகுலம் நடத்துவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இதுவரையில் இம்மாதிரி குருகுலம் ஆரம்பிக்கவில்லையே என்ற எண்ணம் எழுந்ததுண்டு.

சமுதாயம் வளர சமயம் வளரவேண்டும். சமய உணர்வு மக்களுக்கு உண்டாகவேண்டும். சமய அறிவில்லாத சமுதாயம் பிரயோஜனமில்லை. சமய வளர்ச்சிக்கு ஆதீனங்களும் மடாலயங்களும் திருக்கோயில்களும் நல்ல முறையில் இருந்தால்தான் அதன் பணியை நன்ருகச் செய்யமுடியும். உடல் வளர்ச்சி உயிர் வளர்ச்சி இவைகள் இரண்டும் முக்கியமானது. உயிர் வளர்ச்சி இல்லையானுல் மக்கள் மேல்நோக்கி வளரமுடியாது. நல்ல குடிமகனுக வளர முடியாது. சமய உணர்வோடு வளருகின்ற சமுதாயந்தான் நல்ல குழந்தைகளைப் பெறமுடியும்.

ஆறு பையன்களோடு ஆரம்பமாகும் இந்த அப்பர் குருகுலத்தைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். காரணம் நான் ராமகிருஷ்ண மிஷன் இல்லத்தில் 10 ஆண்டுகள் படித்தவன். சமுதாய வளர்ச்சியோடு ஆலயங்களும் மடாலயங்களும் பணிபுரியவேண்டும். மடாலயங்களுக்கு ஏராளமான நிலபுலங்கள் இருந்தும் வருமானம் இல்லை. மொத்தம் எல்லாக் கோயில்களுக்கும் 6 லட்சம் ஏக்கர் நிலங்கள் இருந்தும் சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுக்க முடியவில்லை. விளக்குகளுக்கு எண்ணெய் போடமுடியவிலலை. மேடுபள்ளங்களை நிரப்புவது போல பெரிய கோயில் வருமானத்திலிருந்து சிறிய கோயிலுக்குக் கொடுத்து நடத்துகிறேன். சில பெரிய கோயில்களிலிருந்தும் உண்டியல் வருமானம் வருகிறது. அதைக்கொண்டு மற்ற கோயில்களை நடத்த என்னுல் முடிகிறது. தருமபுரம் ஆதீனத்திற்கு 27 கோயில்கள் இருக்கின்றன. அவைகளில் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி கோயில்தான் பெரிய கோயில். அதற்கும் உண்டியல் வருமானம் அதிகம் இல்லை. அதனுல் பெரிய கோயில்களிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு மற்ற கோயில்களுக்குப் பரிமாறிக்கொள்வதற்குரிய வசதி தருமை ஆதீனத்திற்கில்லை. வேளூர் பிரார்த்தனை தலம்தான். அங்குக்கூட விளக்குகள் போடமுடியாத நிலைமை ஏற்பட்டு அறக்கட்டளைகள் ஏற்படுத்தியிருக்கிருர்கள். மடங்களுக்கு வருமானம் குறைந்திருக்கும் சமயத்தில் இம்மாதிரி அப்பர் குருகுலம் ஒன்றை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சென்னையில் ஏற்படுத்தியிருப்பது பாராட்டுக்குரியது. மகிழ்ச்சிக்குரியது.

இக்குருகுலத்தில் 6 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இது 600 ஆகப் பெருகவேண்டும். மடங்கள்தான் இம்மாதிரி குருகுலங்களை வளர்த்து சைவ சித்தாந்திகளை வளர்க்க வேண்டும். நான் இவ்விதம் செய்தால் சைவத்தை மட்டும் ஆதரிக்கிறேன் என்று சொல்லுவார்கள். ஆறு மதங்களைச் சேர்ந்தவர்களையும் நான் கவனிக்கவேண்டியிருக்கிறது. ஜைனர்களையும் நாங்கள் கவனிக்கிறோம். மடத்தில் சைவசமயக்குழந்தைகளை ஆதரித்தால் யாரும் குறை சொல்வதற்கில்லை. வைணவர்களும் சைவத்தைப் பரப்பலாம்.

என் இலாக்காவில் 8 கல்லூரிகளும், 18 உயர்நிலைப் பள்ளிகளும், 28 சித்த வைத்தியசாலைகளும் இருக்கின்றன. 4000 மாணவர்கள் படிக்கிறார்கள். 3000 அனாதைக் குழந்தைகளும் இருக்கின்றனர். இப்படி, விளம்பரம் இல்லாமல் அறப்பணிகள் ஏராளமாகச் செய்துவருகிறோம்.

வருமானம் இல்லாத கோயில்களுக்குத் தினசரி பூஜைத்திட்டம் ஒன்றை 365 நாட்களுக்கும் 365 குடும்பங்கள் சுவீகாரமாக எடுத்து நடத்தும்படி கேட்டுக்கொள்கிறேன். விராலிமலையில் தினசரி பூஜைக்கு 100 குடும்பங்கள் 100 நாட்களுக்கு நடத்துகின்றன. மற்றொரு ஊரில் ஒரு நாளைக்கு ரூ 10 செலவுத் திட்டத்தில் 365 நாட்களுக்கும் 365 குடும்பங்கள் எண்டோமெண்டுகள் ஏற்படுத்தியிருக்கின்றன. அங்குள்ள மக்கள் நெசவுத் தொழிலாளர்கள். அவர்கள் கோயிலைச் சுவீகாரமாக எடுத்துக்கொண்டு நித்தியபடி பூஜையை நடத்திவருகிறார்கள். அவர்களுக்கு அதிகாரிகள் தேவையில்லை. வருமானம் இல்லாத கோயில்களை அங்குள்ள மக்கள் சுவீகாரமாக எடுத்துக்கொண்டு தினசரி பூஜையை நடத்தலாம்.

கோயில்களில் தேவார திருவாசகங்களைப் பொருளோடு குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லி வருகிறேன்.

ஆறுமாணவர்களுக்கு உணவு, உடை, இடம் தந்து தலைமை ஆசிரியர் திரு. மந்திரம் மூலம் கல்வியையும் போதிக்கச் செய்து ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த அப்பர் குருகுலத்தைத் துவக்கி வைத்து, வாழ்த்தி மீண்டும் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்திற்கு வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்கள்.

குருகுலத்தில் சேர்ந்திருக்கும் மாணவர்களுக்கு சைவசமயக் கோட்பாடுகளைப் போதிக்கும் சில சிறு நூல்கள் தலைவர் மூலம் வழங்கப்பட்டன.

பின்னர் பேசிய தி. நகர் ராமகிருஷ்ணா உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு. V. M. மந்திரம் அவர்கள் அப்பர் குருகுலம் போன்ற இல்லங்கள் அருளினால்தான் ஏற்படுகின்றன என்றும், அருளாளர்களின் எண்ணப்படி ஏற்படும் இம்மாதிரி இல்லங்கள் மக்களை நன்னெறிப்படுத்துகின்றன என்றும், இந்த இல்லங்களில் குழந்தைகளுக்கு உணவு இடவசதி தந்து வளர்ப்பது சமயம் வளர்வதற்கு ஏதுவாகும் என்றும் சொன்னார்கள்.

திரு. S. வடிவேல்பிள்ளை அவர்கள் H. R. E. கமிஷனரையும் தலைமை ஆசிரியரையும் பாராட்டிப் பேசி அப்பர் குருகுலம் தோன்றுவதற்கான காரணங்களையும் விளக்கிப்பேசினார்கள்.

மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு :

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின் சார்பில் மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு, பௌர்ணமி தினமான 28—8—77 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை சென்னை தம்புச் செட்டித் தெருவில் இருக்கும் ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ கமடேஸ்வரர், ஸ்ரீ மனோன்மணி அம்பாள், ஸ்ரீ காளிகாம்பாள் ஆகிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனையும் செய்யப்பட்டன. வழிபாட்டின்போது நிலைய ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசம், திருமுறை பயிலும் குழந்தைகளுடன், திருமுறைப்பாராயணம் செய்தார்.

வழிபாட்டிற்குப்பிறகு சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. முதலில் பேசிய திரு. சிம்மக்குரல் சீதாபதி அவர்கள் நிலையத்தில் நடத்திவரும் மாதவழிபாட்டில் எல்லோரும் கலந்து, கொள்ளவேண்டும் அம்பாளுக்குரிய விசேஷ தினமான பௌர்ணமியன்று விரதம் இருந்து அபிஷேக அர்ச்சனைசெய்து அம்பாளை வழிபட்டால், நல்லன எல்லாம் பெறலாம். அபிராமி அந்தாதியைப் பல முறை பாராயணம் செய்தால் பராசக்தி பரவசமடைந்து பல வரங்களைத் தந்தருள்வாள்' என்று சொன்னார்கள்.

பிறகு திரு. E. தேவராஜன் பேசுகையில் 'கூட்டு வழிபாடு மக்களுக்கு மிக்க பயனளிக்கக்கூடியது. கூட்டு வழிபாட்டில்

கலந்துகொண்டால் பக்தி இல்லாதவருக்கும் பக்தி ஏற்பட்டுப் பரனருள் கிட்டும், வாழ்க்கையும் வளம் பெறும்' என்று கூறினார்கள்.

பிரசார நிலையம் வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் மாத வழிபாட்டின் சிறப்பை எடுத்துக் கூறி 'நால்வர்கள் பாடியருளிய திருமுறைகளைத் தினந்தோறும் ஓதினால் திருவருள்பெற்றுச் செம்மாந்துவாழ்வதற்குரிய நிலைமை ஏற்படும், பெருவாழ்வு உண்டாகும்' என்றுகூறி, எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக் கூட்டத்தை நிறைவு செய்தார்கள்.

---

# இரத்த தானம் ஆரோக்கியம் அளிக்கிறது

40 வயதுக்கு மேற்பட்டவர்கள் அடிக்கடி இரத்ததானம் அளித்தால் அவர்களது இரத்த ஓட்டம் சீரடைகிறது. இதய நோய் நேரிடும் வாய்ப்பு குறைகிறதென்று ஆஸ்திரேலிய வைத்திய ஆராய்ச்சியாளர் டாக்டர் டின்ட்டென்ஃபாஸ் என்பவர் கூறுகிறார். சிட்னி நகர ஆஸ்பத்திரியில் இரத்த ஆய்வுப் பிரிவின் இயக்குனர் இவர்.

இரத்த ஓட்டம் பற்றி 16 ஆண்டுகளாக ஆராய்ந்துவரும் டாக்டர் டின்ட்டென்ஃபாஸ், இரத்ததானம் செய்வதால் இரத்தத்தின் திரவத்தன்மை (நீர்த்தன்மை) அதிகரிக்கிறது என்கிறார்.

இரத்தத்தின் திரவத்தன்மை குறைவதற்கும் இதய நோய்கள் மற்றும் சிறுநீரகநோய்கள் நேரிடுவதற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இரத்தம் அதிக நீர்த்தன்மையுள்ளதாக, அதாவது இரத்த ஓட்டமானது நுண் குழாய்களிலுங்கூட தாராளமாக இருந்தால்தான் வயது முதிர்ச்சி காலத்தில் நல்ல ஆரோக்கியம் இருக்கமுடியும்.

வயது முதிர முதிர இரத்தம் "கெட்டிப்" படுகிறது (திரவத்தன்மை குறைகிறது.) தாராள இரத்த ஓட்டமும் குறைகிறது. இதனால் உயிர்நிலை உறுப்புக்கள் கேடு அடைந்து ஆபத்தான நோய்கள் நேரிடுகின்றன என டாக்டர் டின்ட்டென்ஃபாஸ் கூறுகிறார்.

நன்றி. — தினமணி. 29—8—77.

# எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( பிங்களஹூ புரட்டாசிமீ 1உ முதல் 30உ முடிய )

( 17—9—1977 முதல் 16—10—1977 முடிய )

ஸ்ரீ பிங்களஹூ ஆவணிமீ 31உ சுக்கிரவாரம் சுவாதி நக்ஷத்திரத்தில் சூரிய உதயம் முதல் 52 நாழிகை 40 விநாடிக்கு கடக லக்னத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு கலைக்கியான பதியாய் சிம்ம ராசியிலிருந்து கன்னியா ராசி சங்கிரமணமாக புரட்டாசி மாதப் பிரவேசம் செய்தருளுகிறார். புரட்டாசிமீ 1உ ஸ்திரவாரம் ஷடசீதி புண்ணிய காலமாகும். சங்கிரமண கால கிரகஸ்திதியின் பலனாவது, லோகத்தில் சகலமான பிரஜைகளும் கல்வி, கலை, விஞ்ஞான அறிவு வளர்ச்சியுற்று நாகரிக அனுபோகங்களைக் கொள்வர். தேசங்களில் எங்கும் தொழில் விற்பன்னர்கள் புதிய மாதிரி பொருள்களைப் படைத்து மிகுந்த பலன்களையடைவர். லோகத்தில் சங்கீதம், நடனம், ஓவியம், சிற்பம் ஆகிய கலைகள் நாகரிகத்துடன் மிளிரும். திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவஞான தீர்க்கதரிசிகளாக விளங்குகின்ற குருமகான்களின் அருளுபதேசத்தினால் பிரஜைகள் ஞானம் பெறுவர். நீதி நெறியுடன் நல்வாழ்க்கை நடத்துவர். தேவாலயங்களில் தெய்வ பூஜைகள் இலட்சம்கோடி அருச்சனைகள் வெகுவாக நடைபெறும். லோக சுபிட்சம் மேவிடும்.

குறிப்பு :— சனிப்பெயர்ச்சி

ஸ்ரீ பிங்களஹூ புரட்டாசிமீ 9உ பானுவாரம் (25—9—77) அன்று சூரிய உதயம் முதல் 53 நாழிகை 26 விநாடிக்கு சூரிய புத்திரனாகிய சனி பகவான் கடக ராசியிலிருந்து சிம்ம ராசியில் பிரவேசிப்பார். சனீஸ்வரன் நக்ஷத்திரத்தில் சஞ்சரிக்கிற காலத்தில் லோகத்தில் கொடுமைகள் பல சம்பவிக்கும்.

சனிபகவான் சிம்மராசியில் உலவுகின்ற 2½ ஆண்டுக்காலமும் கடகம், சிம்மம், கன்னி இந்த ராசிகளுக்கு முறையே " பாத்

சனி, ஜென்ம சனி, விரய சனி" என்று நடப்பதாகும். மகர ராசிக்கு அஷ்டம சனி ஏற்படும். முக்கியமாய் மேற்கண்ட இராசிகளையுடையோர் சனிக்கிரக பிரீதி செய்துகொள்ள அல்லல் தீரும்.

மீனம், மிதுனம், துலாம் இந்த ராசிகளுக்கு சத்துரு ஜெயம்; பாக்கிய விருத்தி, கருத்த வஸ்துக்களினுல் ஆதாயம், வனம், தோட்டம், தோப்புத்துரவுகளின்றும் ஆதாயம் ஆகிய நற்பலன் களைக் கொடுத்துவரும்.

மேஷம், ரிஷபம், விருச்சிகம், தனுசு, கும்பம் இந்த ராசி களுக்கு முறையே புத்திரகிலேசம், வீடு வாகனுதிகளில் செலவு, தொழில் அல்லது உத்தியோக மாறுதல், பிதாவுக்கு நலிவு, களத்திரத்திற்குப் பீடை ஆகிய குடும்ப கஷ்டங்கள் தோன்றும்.

எல்லா இராசிகளையுடையோரும் சனிக்கிழமை விரதம் இருந்து அன்று சனீஸ்வரனுக்கு எள் நல்லெண்ணெய் தீபம் ஏற்றி சனீஸ்வர சகஸ்ரநாம அருச்சனை செய்து தோத்தரிக்க கஷ்டங்கள் விலகி நன்மைகள் ஏற்படும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼
( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷ ராசி 9 பாதங்களும் நற்பலனுக நடந்து வரும். தனுதி சௌகரியங்கள் திருப்திகரமாக இருந்து வரும். சகோ தரருக்கு உயர்வும் அரசாங்கவனுகூலங்களும் தரும். இயந்திர வாகன சௌகரியங்கள் திருப்தியளிக்கும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். !வழக்கு விவகாரங்களில் இம்மாதம் 10உ க்குமேல் ஜெய பிராப்தியை அளிக்கும். செய் தொழில்களில் அலுவல்கள் புத்தி சாதுரியமாகச் செயல்பட்டு வரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை¾ – உரோகிணி – மிருகசீர்ஷம்½
( இ. ஊ. ஏ. – ஒ. வ. வி. வூ. – வே. வோ. )

ரிஷப ராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத் தரும். தன பாக்கியங்கள் குறைவுபடாமல் நாணயச் செலவாணியை ஏற் படுத்தி வரும். இரணம் தீரும். வெளுமை வஸ்து பிராப்தியை அளிக்கும். வயிற்றில் அஜீர்ணம் வந்து குணமாகும். ஞாயிற்றுக் கிழமையில் சூரியார்ச்சனை செய்ய நலம் தரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். செய்தொழில் அல்லது உத்தியோகம் சாதாரணமாக நடந்து வரும். சனி ஞாயிறு சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾
( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுன ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபி விருத்தியில் போதிய பண வசதி போஜன சௌகரியம் நன்றாக இருந்து வரும். வித்தியா வியாபாராதிகளில் 10உ முதல் நற் பலன் ஏற்படும். வீடு இயந்திர வாகன வசதிகளில் புதுமையை ஏற்படுத்தும். புத்திரர் புத்திரிகளுக்கு சௌக்கிய பலன் தரும். பெண்கள் வகை சுகவிருத்தி மேலாக இருந்து வரும். செய் தொழில்களில் சில மனோவேக பிரச்சினைகள் வரினும் உடனுக் குடன் ஆறுதலாகும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

4. கடகம்– புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்
( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடக ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். தன வசதி போஜன சௌகரியம் திருப்தியாக இருந்துவரும். இளைய சகோதர சௌக்கியம் நன்றாக இருந்து வரும். பூமி இயந்திரங் களில் விருத்தி பலன் ஏற்பட்டு வரும். பச்சை சிவப்பு கற்கள் பதித்த ஆபரண பிராப்தி உண்டாகும். வித்துவத்ஜன சேர்க்கை புராண காவியம் கேட்டல் சாஸ்திர ஆராய்ச்சி இவற்றில் மனம் செல்லும். அடிக்கடி சுப காரிய நிகழ்ச்சிகளை நடத்தி மன சந்துஷ்டியையளிக்கும். செய்தொழில்களில் அலுவல்கள் புனித மாகச் செயல்பட்டு வரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼
(ம. மி. மு. மெ. – மோ. ட. டி. டு. – டே. )

சிம்ம ராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத் தரும். குடும்பாபிவிருத்தியில் பண வரவு திருப்திகரமாக வந்து கொண்டிருக்கும். நூதன வஸ்துக்கள் வாங்க நேரும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் அரசாங்கவனுகூலங்களும் புகழும் ஏற்படும். குடும்பத்தினர், சௌக்கியம் திருப்தியளிக்கும். மர்ம ஸ்தானத்தில் நலிவு வந்து உடன் குணமாகும். செய்தொழில் களில் நல்ல அனுபோக சௌகரியங்கள் இருந்துவரும். வெள்ளி சனி சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½
( டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ. )

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் தன வரவு சீராக இருந்துவரும். சில

ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். குல நலனுக்கும் குடும்பத்தினர் நலனுக்கும் பிரயாசை மேலிடும். பூமி இயந்திர சம்பந்தமாக அலைச்சலாக இருப்பினும் விருத்தி பலனையளிக்கும். கணவன் மனைவியின் விசுவாசம் நன்ருக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் சாதாரணமாக நடந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾
( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் பண வரவுகள் திருப்தியாக வந்து கொண்டிருக்கும். சகோதரர் நலம் நன்ருக இருந்து வரும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் பிரசித்தம் ஏற்படும். பூமி இயந்திரங்களில் அபிவிருத்தி பலன் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்வு அன்யோன்யமாக நடந்து வரும். செய் தொழில்களில் செலவாக இருப்பினும் நாகரீக விளம்பரத்துடன் நன்மை தருவதாகும். செவ்வாய் புதன் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.
( தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு. )

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடந்துவரும். குடும்பாபிவிருத்தியில் தன வரவுகளில் சர்ச்சைகள் ஏற்படச் செய்யும். சகோதரருக்கு மனே ஆயாசமும் மனக்குறையும் ஏற்படினும் உடன் தெளிவும் சரிபடுவதும் ஆகும். இராசிக்கு ஓர் விபத்து சம்பவிக்கும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலன்தரும். தார புத்திரர்கள் சௌக்கியமாக இருந்து வருவர். பொதுநலப் பணிகளில் இராசாங்க அலுவல்களில் பிரயாசை அதிகமாக இருப்பினும் நலமே ஏற்படும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼
( யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே. )

தனுர் ராசி 9 பாதங்களும் சாதாரண பலனுக நடந்துவரும். குடும்பாபிவிருத்தியில் பண வரவு ஓரளவு திருப்தியாக வரும். சகோதரருக்கு ஸ்திரீ மூலமாக ஓர் நன்மையை ஏற்படுத்தும். தார புத்திரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். வழக்கு விவகாரத்தில் அனுகூலங்கள் திருப்தியாக இராது. பத்திர லிகிதங்களில் எழுத்து முதலிய லேவா தேவிகளில் ஓர் நற்பலன்

ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் கௌரவ நிலைமையாகக் காரியங்கள் செயல்பட்டுவரும். சனி ஞாயிறு சுபமாகும்.

10. மகரம் – உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½
(போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – கா. கி.)

மகர ராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வரவு சீராக இருப்பினும் இல்லற சம்பிரதாயங்கள் எதுவும் தடையின்றி நடைபெறும். வித்துவத்துவம் கலைத்துறையில் பிரசித்தமாக கௌரவத்தை ஏற்படுத்தும். சகோதர விசுவாசம் மேலிடும். சத்துருக்கள் மித்திரமாக வருவர். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். புத்திரர் புத்திரிகளின் சௌகரியம் நன்றாக இருந்துவரும். செய் தொழில் அல்லது உத்தியோகத்தில் அனுபோக சௌகரியங்களையும் பதவி உயர்வையும் அளிக்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾
(கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. த.)

கும்ப ராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் போதிய சௌகரியங்களும் சமயோசித வருமானங்களும் திருப்தியாக இருந்துவரும். சகோதரர் மனஸ்தாபம் வரினும் உடன் சுமுகமாகும். புத்திரருக்குச் சொற்ப உஷ்ண நலிவுகள் காட்டி நீக்கும். 10௳ முதல் புத்திரருக்கு சௌக்கியமும் பந்து அம்மான்களின் ஒத்துழைப்பும் மனோ அபிலாஷைகள் நிறைவேறுதலும் ஆகும். தாம்பத்திய வாழ்வு அன்யோன்யமாக இருந்துவரும். செய் தொழில்களில் சாமார்த்தியத்தினால் காரியங்கள் செயல்பட்டு வரும். வெள்ளி சனி சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.
(தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச.சி.)

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் சொற்ப சிரமங்கள் தோன்றினும் ஓரளவு சமயோசித வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதர நலம் சாதாரணமாக இருந்துவரும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் புகழும் ஓர் அளவு நற்பலனும் தரும். பூமி இயந்திரங்களின் அபிவிருத்தியில் செலவு ஏற்படினும் ஆதாயகரமானதாகும். தேகத்தில் உஷ்ண நலிவும் மனைவிக்கு நரம்புக்கோளாறு சிரோரோகம் போன்ற நலிவும் காட்டி நீக்கும். செய் தொழிலில் காரியங்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு வரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

# மனத்தைக் கவர்ந்த மணிவிழா

விண் பொய்ப்பினும், மண் பொய்ப்பினும் தமது வண்மை பொய்யா வளத்தினர் என்றும், புயல் மறந்து மீன் சனிபுக்கு ஊன் சலிக்கும் காலத்தும், கலங்கல் இலா மனப்பெருவண்மை யுடையராய் வாழ்பவர்கள் என்றும், காழி எனப் பெறும் சீகாழி நகரத்து வாழ் மக்கள் இயல்பை, காழியர் தவமாய் - கவுணியர் தனமாய் அவதரித்தருளிய திருஞான சம்பந்தர் அருளிச்செய் துள்ளார். பல்வேறு தலங்களைப் பற்றிய ஞானசம்பந்தர் வாக்கு இன்றும் அவ்வத் தலங்களிலே பொய்யாது கண்கூடாக விளங்கி நிற்கக் காண்கின்றோம். அருளாளர்களின் தெய்வ வாக்குப் பொய்க்குமா ?

திருஞானசம்பந்தர் அருள் வாக்கிற்கு ஒப்ப, கொடைமாருச் செல்வர்கள் பலர் இன்றும் சீகாழியிலே வாழ்ந்து வருகின்றனர். இவ்வாருன குடும்பங்களில் சிறந்து விளங்குவது சீகாழி முதலியார் குடும்பம். திருமுறைப்பற்றும், சிவபூஜைத் திறமும் குரு, இலிங்க, சங்கம வழிபாட்டுப் பண்பும்கொண்ட அறக் குடும்பம் இது. அறிந்தவரையில் ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு மேலாக திரு. சின்னையா முதலியார் காலம் தொடங்கி வளர்ந்துவரும் சீகாழி முதலியார் குடும்பத்தில், நல்லறச் செல்வராய், பக்தியும், பண்பாடும்மிக்க இனியராய்த் திகழ்பவர் **திரு. ச. விசுவநாத முதலியார் அவர்கள்.**

150 ஆண்டுகளுக்கு மேலாக அறம் செழிக்க, தமிழ் தழைக்க சைவம் ஓங்க, நல்லன நாளும் இயற்றியும், அல்லனகடிந்தும் வாழ்ந்துவரும் தம் குடிப்பெருமைக்கு அழகூட்டிய சிறப்பு திரு. ச. விசுவநாத முதலியார் அவர்களுக்கு உண்டு. சீகாழி திரு. சின்னையா முதலியார் காலந்தொடங்கி ஆல்போல்தழைத்து அருகுபோல் வேரோடி வளர்ந்துவரும் சீகாழி முதலியார் குடும்பத்தின் பக்திப் பண்பாட்டுச் சிறப்பிற்குச் சான்று கூறுவ தாக அமைந்தது அண்மையில் நடைபெற்ற திரு. ச. விசுவநாத முதலியார் அவர்களின் மணி விழா.

எதனைச் செய்தாலும் சிறப்பாகச் செய்தலும் திருத்தமுறச் செய்தலும் பெரியோர் இயல்பு. திரு. முதலியார் அவர்கள் தம் மணிவிழாவைக் கொண்டாடியது, ஏனைய சைவப்பெருமக்களும் நல்லன்பர்களும் போற்றிப் பாராட்டும் வகையில் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. திரு. விசுவநாத முதலியார் பி.ஏ., பட்டதாரி. 'செல்வர்க்கே செல்வம் தகைத்து' என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க அடக்கமுடையவர். சிவபூஜையும், திருமுறைவழிபாடும், குரு, இலிங்க, சங்கம பக்தியும்கொண்டவர். அறப்பணி, மற்றும்

கல்வி வளர்ச்சிகளுக்குக் கொடை வழங்கியும் உடனிருந்து பணியாற்றியும் சிறந்தவர். இவரது அறுபதாண்டு நிறைவு மணிவிழா, நான்கு வகையாகக் கொண்டாடப்பெற்றிருக்கிறது.

மணிவிழாச்செல்வர், திரு. ச. விசுவநாத முதலியார் தம் அறுபதாண்டு நிறைவுவிழாவிற்கு இரண்டுநாள் முன்னதாகவே 24—8—77 இல் தருமைவந்து, 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளைத் தரிசித்து, காணிக்கை செலுத்தி வழிபட்டு ஆசிபெற்றார். குரு இலிங்க - சங்கம வழிபாடே சைவத்தின் சம்பிரதாய வழிபாட்டு முறையாகும். இதற்குத்தக மறுநாள் 25—8—77 இல் தருமை யாதீன பூஜாமூர்த்தியும், கண்ணுக்கினிய பொருளாகி ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் திருக்கரத்தில் எழுந்தருளியவருமாகிய செந் தமிழ்ச் சொக்கநாதப் பெருமானுக்கு விசேட அபிடேக ஆரா தனைகள் நிகழ்த்தி, நண்பகல் சீரடியார்களுக்குத் திருமடத்தில் அன்னம்பாலிக்கும் மாகேஸ்வர பூஜையையும் நிகழ்த்துவித்தார். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் முதலியார் அவர்கள் முதல்நாள் தம்மை வழிபட்டு ஆசி பெற்ற மையையும், மறுநாள் சொக்கநாதர் வழிபாடு நிகழ்த்தி, மாகேஸ் வரபூஜை செய்வித்ததையும் பாராட்டி ஆசிகூறி, இவை முறையே குரு, இலிங்க, சங்கம வழிபாடாக அமைந்த பொருத்தத்தையும் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

26—8—77 இல் திரு. விசுவநாத முதலியார் அவர்கள் தம் துணைவியார் திருமதி. ஞானம்பாள் அண்ணியாருடனாகத் தருமையாதீனத்திற்குட்பட்டதும், மார்க்கண்டருக்காகக்காலனைக் காய்ந்தருளிய பெருமான் எழுந்தருளியிருப்பதும், மணிவிழாக் கொள்வதற்குப் பெரிதும் உகந்ததுமான அருள்மிகு அபிராமி அம்மை உடனுறை அருள்மிகு அமிர்தகடேசுவரர் திருக்கோயிலில் மணிவிழாக் கொண்டார். திருக்கோயிலில் மூர்த்திகளுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்த்துவித்து வழிபட்டார். பின் தாம் பல்வேறிடங்களிலிருந்தும் அழைத்திருந்த சிவபூஜகர் களை ஒருங்கு இருக்கவைத்து, சிவபூஜை செய்வித்து, ஒவ்வொரு சிவபூஜகரையும் தம் துணைவியாருடன் வணங்கி விபூதி பெற்றுத் தரித்துக்கொண்டு, பின் தமக்குச் சாந்தி அபிடேகம் நிகழச் செய்தார். முன்னொருகாலத்தே வசிட்ட முனிவர் தம் ஆசிரமத்தே அடியவர்களைச் சிவபூஜை செய்யச்செய்து வழிபட்ட பழைய புராண வரலாற்றை இச்செயல் நினைவூட்டுவதாக அமைந்தது. திருவருட்பொருத்தமாக, சிவபூஜகர் அறுபத்துமூவர் என்ற எண்ணிக்கையில் அமைந்தமை திரு. முதலியார் அவர்களின் பெரியபுராண அடியார் பக்திக்குச் சான்று கூறுவதாக அமைந் திருந்தது.

மணிவிழா அன்று நண்பகல் நெருங்கிய உறவினர் நூற்றுக் கணக்கானவர் இருக்கவும், முன்னதாகச் சிவபூஜகர்களை அமரச் செய்து, தம் துணைவியார் வாசமலர் ஏந்திவர, சிவனடியார்களை அர்ச்சித்துத் தூப தீபங்களுடன் போற்றி, வணங்கி மாகேஸ்வர பூஜை செய்வித்தமையும், அடுத்து உறவினர்களை உண்பித் தமையும், இறுதியாகத் தாம் உணவு கொண்டமையும் கண்டு மகிழ்ந்த அன்பர்கள் திரு. முதலியார் அவர்களின் இச்செயல், இவ்விருபதாம் நூற்றாண்டில் காண்டற்கரியது என்றும்,

“கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்திடை வைத்தருச்சனை செய்தபின்
உண்டிநாலு விதத்தில் ஆறுசுவைத் திறத்தினில் ஒப்பிலா
அண்டர்நாயகர் தொண்டர் இச்சையில் அமுதுசெய்ய
அளித்துளார்”

என்பதுபோல, நமது நாயன்மார்களின் செயல்களை விரித் துரைப்பதாக அமைந்ததென்றும், செல்வம்மிக்க சிவ பக்தர்கள் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறை இவ்வாறல்லவா அமைய வேண்டுமென்றும் கூறி வியந்தனர். பின்னர் திரு. முதலியார் அவர்கள் தம் குடும்பத்ினருடன் தருமை வந்து ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களைத் தரிசித்து ஆசிபெற்றார்கள்.



ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்கள் ஆசின் கவசமாகப் பொன்னுடை போர்த்திப் பிரசாதங்கள் வழங்கி ஆசீர்வதித்தார்கள்.

மூன்றும் அங்கமாக திரு. விசுவநாத முதலியார் அவர்களின் மணிவிழாவை, இவர்கள் கடந்த 13 ஆண்டுகளுக்கு மேலாகத் தாளாளராக இருந்து கல்விப்பணி செய்துவரும் சீகாழி சபாநாயக முதலியார் இந்து உயர்நிலைப் பள்ளியினர் 3—9—77 அன்று சிறப்பாகக் கொண்டாடினர். திரு. சிதம்பரநாத முதலியார் அவர்களுக்குப்பின் நீண்டகாலம் இப்பள்ளியின் வளர்ச்சியில் பங்கேற்றுவரும் தம் தாளாளரது மணிவிழாவைப் பள்ளியினர் அன்புடன் கொண்டாடினர். காசிவாசி ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் தலைமையில், திருமுருக கிருபானந்தவாரியார் வாழ்த்துரை வழங்கவும், சீகாழி கோவிந்தராஜன் அவர்களது இன்னிசையோடு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மணிவிழாவையொட்டி, சீகாழி முதலியார் குடும்பத்தினரின் நல்லறப்பணிகளை விளக்கும் அழகிய விழா மலர் ஒன்றும் வெளியிடப்பெற்றது. திரு. விசுவநாத முதலியார் அவர்கள் மூவாயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர் மாணவ - மாண வியர்க்கு விருந்தளித்து மகிழ்ந்தார்கள்.

தருமை ஆதீனத்தில் தொடங்கி, தருமையாதீனத்திற் குட்பட்ட வைத்தீஸ்வரன் கோயிலில் திரு. முதலியார் அவர் களின் மணிவிழா 4—9—77 கார்த்திகைத் திருநாளில் நிறை வெய்தியது. மாதந்தோறும் அருள்மிகு செல்வமுத்துக்குமாரப் பெருமானைத் தரிசிக்கும் நியமமுடைய திரு. விசுவநாத முதலியார் அவர்கள் ரூபாய் 1200/- செலுத்தி அருள்மிகு தையல்நாயகி அம்மை உடனாகிய அருள்மிகு வைத்தியநாதப் பெருமானுக்கும் அருள்மிகு செல்வ முத்துக்குமாரப் பெருமானுக்கும் விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்த்துவித்து வழிபாடாற்றினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பிரசாதங்கள் வழங்கி ஆசி யருளினார்கள். திரு. ச. விசுவநாத முதலியார் அவர்களின் மணி விழா, சைவ மெய்யன்பர்கள் பின்பற்றவேண்டிய முறையில் சிறப் பாக நடைபெற்றமை பாராட்டுக்குரியது. மணிவிழாக்கொண்ட அன்பர் நலமெலாம் பெற்று நாட்டுக்கும், சமுதாயத்திற்கும், சமயத்திற்கும் பெருந்தொண்டாற்றி நீடுவாழ்வாராக.

பரவுக சீரடியார் தொண்டு! வளர்க சைவப் பெருநெறி!